Registered as a Newspaper [illegible] 06 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 21 (05.03.94) சனிக்கிழமை ஓசை 15

## இருவகையான கிருமிநாசினி பாவனைக்குத் தடைவிதிப்பு

இரு கிருமிநாசினி வகைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. தானியம் மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கு உபயோகிக்கப்படும் இந்தக் கிருமிநாசினி அதிக நச்சுத் தன்மை வாய்ந்ததால் நுகர்வோர் பாதிப்படையலாம் என்ற அச்சத்தில் இந்த இரு கிருமிநாசினி வகைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. மாசல், பெத்தரைட் என்ற இந்த கிருமிநாசினிகள் வடபகுதியில் அதிகமாக மரக்கறிப் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்டு வந்தன. இவற்றை உபயோகிக்கும் விவசாயிகள் குறிப்பிட்ட காலம் முடிவதற்குமுன்னர் அறுவடை செய்து மரக்கறி வகைகளை விற்பனைக்கு விடுவதால் நுகர்வோர் பாதிப்படையலாம் என்று சுமநலசேவை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

# யுத்தத்தை நிறுத்த அரசாங்கத்திடம் உருப்படியான திட்டம் எதுவுமில்லை!

### விசேட கப்பலில்
## இன்று நோயாளர் வருவர்

(வடமராட்சி)

கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்று குணமடைந்த 90 நோயாளிகள் இன்று விசேட கப்பல்மூலம் பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேராக வருகின்றனர்.

நீண்டநாட்களாக வரமுடியாமல் தடைப்பட்டிருந்த இந்நோயாளிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டினையடுத்து மேற்குறித்த கப்பல் மூலம் வருகின்றனர்.

யாழ்: மாவட்டத்தில் இருந்து வரும் நோயாளிகள் இதுவரை சிகிச்சைபெற முடியாமல் அவதியுறும் நோயாளிகள் 70 பேர் இக்கப்பல் மூலம் கொழும்பு மற்றும் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுவர். (யோ)

### வாதுவ கப்பலில்
## தனியாருக்கு பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

இனி ''வாதுவ'' கப்பலில் தனியாருக்கு மட்டுமே பொருள்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பான வானொலிச் செய்தி ஒன்று நேற்று யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு கொழும்பில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. (யா).(ச)

## இரவுநேர எறிகணை வீச்சு; விமான நடமாட்டம்

(வடமராட்சி)

வலிகாமம் வடக்குப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது பலாலியிலிருந்து இரவு நேரம் ஏவப்படும் ஆட்லறி ஷெல்கள் அங்குள்ள குடியிருப்

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கோமாரி புறப்பட்டது

(வடமராட்சி)

தீவகத்திற்கு பாரமாவகைகளையும், காங்கேசன்துறையில் இராணுவத்திற்கு விறகையும் இறக்கி முடித்த 'கோமாரி' கப்பல் நேற்றுக்காலை அங்கிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச்சென்றது.

பருத்தித்துறையில் தரித்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## கோமாரியில் அத்தியாவசியப் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைமுகத்தில் வைத்து ''கோமாரி'' கப்பலில் ஒருதொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களை

## கலாநிதி கருணரட்னா சாடுகிறார்

[கொழும்பு]

"வடக்கு -கிழக்கு யுத்தம் விரைவில் முடிவிற்குக் கொண்டுவரப்படும் என நாடு முழுவதும் பிரசாரம் செய்யும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர உருப்படியாக என்ன நடவடிக்கையை இதுவரை மேற்கொண்டுள்ளார்?" இவ்வாறு கலாநிதி கருணரட்னா அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்தத்தை உண்மையிலேயே முடிவுக்குக் கொண்டுவரவிரும்பினால் உருப்படியான தீர்வுஒன்றைமுன்வைக்க வேண்டும். அவ்வாறு தீர்வு ஒன்றும் இல்லாத நிலையில் எவ்வாறு யுத்தம் முடிவுக்கு வரும் என பிரசாரம் செய்ய முடியும்? என அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், பாடசாலை, மருத்துவமனைகளின் தேவைகள் முழுமையாக யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டால் தீர்க்கப்படும் என நாடுமுழுவதும் தெரிவிக்கும் கருத்தை வன்மையாகக் கண்டித்தார்.

தமிழ்மொழிபேசும் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கத்தினால் இந்த நிலையில்இருந்து ஒருநாளும் கொண்டுவர முடியாது. எனவே அரசாங்கம் யுத்தத்தை இராணுவ நடவடிக்கை மூலம் வெற்றிகாண்பதனையே நோக்காகக் கொண்டு பெருந்தொகையான பணத்தை செலவிட்டு வருகின்றது. இராணுவ செலவை அதிகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

தமிழர்களின் குறைந்த அளவு கோரிக்கையைக்கூட நிறைவேற்ற முடியாமல் அதனை ஏற்றுக்கொள்ள முடியாத அரசாங்கம் எவ்வாறு இவ்யுத்தத்தைத் தீர்க்கப் போகின்றது என்பது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. எனவே ஒருபோதும் அரசாங்கம் இந் நிலையில் இருந்துகொண்டு சிவில் யுத்தத்திற்குத் தீர்வுகாண முடியாது என்றார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் சுகாதாரம், கல்வித் துறையில் பெரிய விழுக்காடு ஏற்பட்டுள்ளது இதனால் தினமும் மருத்துவ வசதியின்றி மக்கள் மடிகின்றார்கள். இதனால் அவர்களின் ஆயுட்காலம் வெகுவாகக் குறைந்துசென்று மரணவீதம் அதிகரிக்கின்றது என மேலும் அவர் கூறினார்.

## கட்சித்தலைமையை சந்திரிகாவிற்கு சிறிமாவோ வழங்க முடிவு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின் தலைமையை சந்திரிகா குமாரணதுங்கவுக்கு வழங்க தான் முடிவெடுத்துள்ளதாக எதிர்க் நடவடிக்கைகளுக்கும் தேர்தல் தொடர்பான சகல பிரசாரங்களையும் சந்திரிகா குமாரணதுங்கா கவனிப்பார் என்றும், தான் அதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கப் போவதாகவும் உறுதியளித்தார்.

படும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

...றுள்ளது. (பா).(ச)

# இரவுநேர எறிகணை வீச்சு; விமான நடமாட்டம்

(வடமராட்சி)

வலிகாமம் வடக்குப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது இரவுவேளைகளில் ஆட்லறி ஷெல்கள் வீசப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் இரவும் அதற்கு முதல் நாளும் இரவுநேரத்தில் திடீர் திடீரென ஷெல் ஏவப்பட்டு வருகின்றது.

வளலாய், இடைக்காடு, பத்தைமேனி பகுதி குடியிருப்புகள் மீதே பலாலி சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து ஆட்லறி ஷெல்தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. அநேகமாக இரவு 9 மணிக்கு பின்னரே கடும் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

பலாலியிலிருந்து இரவு நேரம் ஏவப்படும் ஆட்லறி ஷெல்கள் அங்குள்ள குடியிருப்புகளில் விழுந்து வெடித்தன. அப்பகுதிமக்கள் பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்குச் சென்றுள்ளமையால் பாரிய ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டன.

இதேவேளை ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது குண்டுவீச்சு விமானங்கள் அப்பகுதிகள் மீது வட்டமிட்டு நோட்டமிடுகின்றன குண்டுவீச்சு விமானங்களின் நடவடிக்கையினால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர். (யோ)

# குப்பையில் கிடந்த குண்டு வெடித்து சிறுவன் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஏற்பட்ட வெடிகுண்டு சம்பவத்தில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான் வட்டக்கச்சி மாயவனூரர் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

வீட்டின் பின்புறம் குப்பைக் கிடங்கினுள் கிடந்த பழுதான குண்டு ஒன்றை எடுத்த இந்த பத்து வயது சிறுவன் அதனை இரும்புக்கம்பியால் அடித்தபோது குண்டு வெடித்து சிறுவன் காயமடைந்தான்.

# அத்தியாவசியப் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைமுகத்தில் வைத்து ''கோமாரி'' கப்பலில் ஒருதொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இக்கப்பலில் 2000 மெற்றிக்தொன் அரிசியும், 1000 மெற்றிக்தொன் சீனியும், 150 மெற்றிக்தொன் பருப்பும் எடுத்துவரப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (பா).(ச)

# மாகோவில் மண்ணெய்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு ''மாகோ'' கப்பலில் 4500 பரல் மண்ணெண்ணெயும் 3000 பரல் தேங்காய் எண்ணெயும் மிகவிரைவில் எடுத்துவரப்படவுள்ளதாக தெரியவருகிறது.

மாகோ கப்பலின் அடுத்த வடபகுதி நோக்கிய பயணத்தின்போது இவை அக்கப்பலில் எடுத்துவரப்படும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா).(ச)

# செயலகம் கடன் வழங்காமையே மண்ணெய் பெறாமைக்கு காரணம்

## கூட்டுறவுச்சங்க தலைவர் கூறுகிறார்

(நமதுநிருபர்)

யாழ்மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடிக்குள் இருப்பதாகவும் செயலகம் அளித்த வாக்குறுதிக்கிணங்க கடன் வழங்காமையே மண்ணெண்ணெயை கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு விநியோகிக்க முடியாமைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது செயலக புனர்வாழ்வுப் பிரிவால் வழங்கப்படும் இரண்டாவது சுற்று மண்ணெண்ணெயை பல சங்கங்கள் இதுவரைபெற்று விநியோகிக்கவில்லைஎன்ற யாழ். அரச அதிபரின் செய்திக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், அண்மையில் யாழ். செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நிதிநெருக்கடியைச் சந்தித்துள்ளதால் பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களைப் பெற்று விநியோகிக்க முடியாதநிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி இரண்டுவார கடன் வசதியைச் செய்துதருமாறு கோரியிருந்தோம். எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அரசஅதிபர் கடன் வசதியை

(06ஆம் பக்கம் பார்க்க)

# சிறிமாவோ வழங்க முடிவு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின் தலைமையை சந்திரிகா குமாரணதுங்கவுக்கு வழங்க தான் முடிவெடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவியும் சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதற்காக தனது முழுமையான ஆசியை வழங்குவதாகவும் அநுரா பண்டாரநாயக்கா கட்சியில் இருந்து விலகிய பின்னர் கட்சித் தலைமை தொடர்பாக எந்தப் பிணவும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்

எனவே தென் மாகாண சபையின் தேர்தல் பிரசாரத்தின் போது பிரதான கூட்டங்களில் மட்டும் தான் கலந்து கொள்ள இருப்பதாக தெரிவித்த திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்து சகல நடவடிக்கைகளுக்கும் தேர்தல் தொடர்பான சகல பிரசாரங்களையும் சந்திரிக்கா குமாரணதுங்கா கவனிப்பார் என்றும், தான் அதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கப் போவதாகவும் உறுதியளித்தார்.

...ஏற்பட்டுள்ளது. இதனால் தினமும் மருத்துவ வசதியின்றி மக்கள் மடிகின்றார்கள். இதனால் அவர்களின் ஆயுட்காலம் வெகுவாகக் குறைந்துசென்று மரணவீதம் அதிகரிக்கின்றது என மேலும் அவர் கூறினார்.

# பல்கலைக்கழக அனுமதி முறை மாற்றுவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிக்கும் தற்போதுள்ள முறையில் மாற்றம் கொண்டுவருவது குறித்து ஆராயப்பட்டுவருகிறது.

பல்கலைக்கழக அனுமதி முறையை மாற்றி அமைப்பது குறித்து ஆராய்வதற்கு புதிய ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழு செய்த விதப்புரைகளுக்கமையவே இப்புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதி முறையில் சாத்தியமான மாற்றங்களைக் கொண்டு வருவது அல்லது தற்போதுள்ள அனுமதி முறையை முற்றாகவே நீக்கிவிட்டு புதிய அனுமதி முறையை அறிமுகப்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தென்னிலங்கை சிறைகளிலிருந்து

# 27 தமிழ் இளைஞர்கள் நாளை விடுவிக்கப்படுவர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தென்னிலங்கை சிறைகளில் அரசால் கைது செய்து வைக்கப்பட்டிருக்கும் 130 பேரில் 27 பேரை நாளை அரசு விடுவிக்கும் என புனர்வாழ்வுத்துறை அதிகாரி பிரிகேடியர் ஆனந்த வீரசேகர கூறியுள்ளார்.

ஆனால் புலிகள் சிறைப்பிடித்துவைத்திருக்கும்போர்க் கைதிகளில் சிலரை விடுதலைப் புலிகளும் விடுவிப்பர் என்ற எதிர்பார்ப்பிலேயே அரசு இந்த சந்தேக நபர்களை விடுவிப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

# அரச சார்பற்ற நிறுவன நிதியில் பெருவெட்டு

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நிதியில் வெட்டுவிழும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் பத்திற்கு மேற்பட்ட பல உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான நிதி பல வெளிநாடுகளினாலேயே வழங்கப்பட்டுவருவது தெரிந்ததே.

தேசியரீதியிலான இவ் அரசசார்பற்ற நிறுவனங்கள் சில பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்வதன் மூலம் இந் நிதியினை தாம் பெற்றுக்கொள்ள எத்தனித்து வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றின் பிரதிநிதிகள் திடீரென வடக்கிற்கு விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகளை அவதானித்தபின் கொழும்பு சென்று தமக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு பொய்யான அறிக்கைகளைச் சமர்ப்பித்து தாம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் உதவிகளையும் செய்துவருவதாக காட்டுகின்றனர்.

இவர்களின் இத்தகைய அறிக்கைகளால் உதவி வழங்

( 6ஆம் பக்கம் பார்க்க)

# மண்ணெய் விநியோகிப்பதில் கூட்டுறவு சங்கங்கள் பின்னடிப்பு

## அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டுகிறார்

(நமது நிருபர்)

பொதுமக்களுக்கு குடும்பத்திற்கு நான்கு லீற்றர் வீதம் இரண்டாவது சுற்று மண்ணெண்ணெயைப் பெற்று உடனடியாக விநியோகிக்கும்படி சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில்உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குரிய மண்ணெண்ணெயை இதுவரை வந்து புனர்வாழ்வுத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புனர்வாழ்வுத் திணைக்களம் இரண்டாவது சுற்று மண்ணெண்ணெயை வந்து பெற்றுக்கொள்ளும்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்தபோதிலும் அவை செவிசாய்க்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலோலி, அச்சுவேலி, கட்டைவேலி, பளை, நல்லூர், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய ஏழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இதுவரை தமக்குரிய மண்ணெண்ணெயைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச), (பர)

## வரி விளம்பரம்

### மில்க்வைற் பார்சோப்

சலவைக்குச் சிறந்தது- மிக் கனமானது மில்க்வைற் பார் சோப்- கட்டி ஒன்று ரூ.20- மட்டுமே- மில்க்வைற் பார் சோப் மேலுறை பத்து சேர்ப்பித்து - யோகாசன, சூரிய நமஸ்கார விளக்கப்படப் பிரதியொன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்- ''மில்க்வைற்'' (சி-8756)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஹைலைன் பிறவுண் (HY-LINE BROWN) பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு- ''மல்லிகாபதி'' சந்தை ஒழுங்கை மானிப்பாய்- (7661)

### வியாபாரிகட்கு

அழகுசாதனப் பொருள்கள், லேஸ். நூல், கோல்ட் கவரிங் நகைகள், எவர்சில்வர் பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின்சார வீதி, யாழ்ப்பாணம் (சி-8709)

### மின்னொளியில் சைனீஸ் உணவு/சூப்

வைபவங்களுக்கான விசேட உணவுவகை, - சூப்வகை, உங்கள் இல்லம் வரையிலான பரிமாறு சேவைக்கும் நாடுங்கள். காருண்யா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7662)


### கம்பன் விழா

நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் வடமராட்சி கம்பன் கழகத்தினரின் கம்பன் விழாவில் இன்றைய நிகழ்வுகளாக காலையில் சுழலும் சொற்போர் நிகழ்ச்சி நடைபெறும்; 'கற்றோர் மனதை பெரிதும் களிப்புறச் செய்வது' என்ற தலைப்பிலான சொற்போரில் இ. ஜெயராஜ் நடுவராக விளங்குவார்;

மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சியில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் 'கம்பனும் தவறிழைத்தான்' என்ற பொருளில் விவாத அரங்கும், 'படைத்தவனை சந்திக்கும் பாத்திரங்கள்' எனும் நிகழ்வும் நடைபெறும்,

# தமிழர்களுக்கு அநுரா போதிக்க என்ன அருகதை?

(கொழும்பு)

இங்கே மகாசபையை அமரர் எஸ். டபிள்யூ ஆர். டி பண்டாரநாயக்கா உருவாக்கியதைத் தொடர்ந்தே தமிழர்கள் சார்பில் தமிழ்க்காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது: இதனை ஏன் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா மறந்து போனார் என்று நவசமசமாஜக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்:

தனியான அரசியல் அமைப்புகளை உருவாக்குவதை விடுத்து அரசாங்கக்கட்சியுடன் சேர்ந்து கொள்வதன் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று அநுரா பண்டாரநாயக்கா அண்மையில் சாய்ந்த மருது பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டதையடுத்து அதற்கு பதிலளித்துள்ள நவசமசமாஜக்கட்சிப் பிரமுகர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் மேலும் சிறுபான்மை மக்களுக்கு உபதேசம் செய்ய அநுராவிற்கு அருகதையில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநுரா பண்டாரநாயக்க தமது உரையின்போது தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தமிழரசுக் கட்சி போன்ற அமைப்புக்கள் தோன்றியமையாலேயே இங்கே மக்கள்மத்தியில் கசப்பும் எதிர்ப்பும் ஏற்பட்டதாகவும் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மன்சூர் மீது அஷ்ரப் கண்டனம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸின் அச்சுறுத்தலினால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தலின் அமைச்சர் மன்சூர் ஜனநாயக உருவத்தையே மாற்றி தனது அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தியதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்தெரிவிக்கின்றார்;

இவர் அமைச்சின் அதிகாரத்தை பயன்படுத்தி பொலிசாரை கொலை மிரட்டல் மற்றும் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுத்தியதாகவும், இதற்கு விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் அரசியல் பிரமுகர் தான் என்பதைகாட்ட மன்சூர் முயன்றதாகவும் இதற்குக் காரணம் தோல்வி ஏற்படும் என்ற பீதி தான் என்றார்;

# படையினருக்கு மரியாதை அமைதி பேணுவதேயாம்

**-அமைச்சர் டிரோன் பெர்னான்டோ**

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில், அமைதியையும் ஸ்திரப்பாட்டையும் பேணுவதே வடக்கு, கிழக்குப் பகுதியில் சண்டையில் ஈடுபட்டுவரும் படையினருக்கு செய்யும் அதி உயர்ந்த மரியாதையாகும்: இவ்வாறு தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னான்டோ கூறியுள்ளார்.

அரசாங்க அச்சகத்தின் விளையாட்டுச் சங்கம், யுத்த முனையிலுள்ள படையினருக்காக முச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்த வைபவத்தில் அமைச்சர் மேலும் கூறும்போது நாட்டின் அபிவிருத்தியை பாதிக்கும் முயற்சிகளை முறியடிக்க இது பெரிதும் உதவும் எனத் தெரிவித்தார்- அத்துடன் விடுதலைப் புலிகள் நாடு முழுவதையும் யுத்தகளமாக்கி முதலீட்டாளர்களையும் உல்லாசப் பயணிகளையும் வரவிடாமற் செய்ய திட்டமிட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்-

# ஜேர்மன் உதவியின் கீழ் பயிற்சி நெறிகள்

(கொழும்புத்துறை)

ஜேர்மன் ஜனநாயக குடியரசின் உதவித்திட்டத்தின் கீழ் அறவழிப் போராட்டக் [illegible] கப்படவுள்ளன;

அறவழிப் போராட்டக்குழுவினரால் நடாத்தப்படும்இப் பயிற்சிநெறிகளில் பங்குபற்ற [illegible]


### இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்

# ஆண்டுப் பொதுக்கூட்டம்

06-03-1994ஆம் திகதி நடைபெறவிருந்த மேற்படி கூட்டம், தவிர்க்க முடியாத காரணங்களால் 19-03-1994 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறுமென்பதை அங்கத்தவர்களுக்கு அறியத் தருகின்றோம்:

நா. முத்தையா
தலைவர்.

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்:

நல்லைஆதீனம்,
யாழ்ப்பாணம்; (சி-8769)


### யாழ் மறை மாவட்ட

# கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மகாநாடு

**16. ''புதுப்பித்தல்'' என்பதுபற்றிப் பல முறை சொன்னீர்கள். புதுப்பித்தல் என்னும்போது என்ன கருதுகிறீர்கள்?**

ஆயர் அவர்கள் புதுப்பித்தலில் மூன்று படிகள் உண்டு எனத் தம் திருமடலில் சொல்லுகிறார் 1) ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்து யேசுவை தனது ஆண்டவராகவும் மீட்பராகவும் பற்றிக்கொண்டு ''இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்'' என்ற விசுவாச வாழ்வில் ஈடுபடுதல் 2) கிறிஸ்தவர்கள் தமது செப வாழ்விலும், வழிபாட்டிலும் நிறை விசுவாசத்துடன் பங்குகொள்ளுதல் 3) இறை வார்த்தையினாலும் அருள் சாதனங்களாலும் ஊட்டம்பெற்று தன்னலத்தை விடுத்து, பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக மாறுவது

**17. தனிப்பட்ட கேள்வி ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இப்போராட்ட சூழ்நிலையிலும் இம்மகாநாடு தேவையா? அது பயன் தருமா?**

நல்ல கேள்விதான் கேட்டீர்கள்: இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றைப் பார்க்கும்போது யாழ்ப்பாண மறைமாவட்டம் பழம்பெருமை வாய்ந்த ஒரு மறைமாவட்டம்; இன்று போர்க்காலச் சூழ்நிலைகளால், அதன் தாக்கங்களால் எமது மறை வாழ்வு குழம்பியுள்ளது உண்மைதான் ஏன் இந்த மகாநாட்டின் செயற்பாடுகள் பல கஷ்டத்தின் மத்தியில் தான் மேற்கொள்ளப்படுகிறது பெருந்தொகைப் பணம் செலவுசெய்யப்படுகிறது கிளிநொச்சி வட்டாரக் குருக்கள், இறைமக்கள் மகாநாட்டிற்கு வந்துபோவதே மிகவும் கஷ்டமானது இருந்தாலும் இம்மகாநாடு யாழ்ப்பாணக் கத்தோலிக்கத் திருச்சபைக்கு ஒரு புத்துணர்வைக் கொண்டுவரும் என்று நம்புகிறோம் சமகாலத்தின் வேதனைகளும், தாக்கங்களும் மக்களை ஆலயத்திற்குத் தூர அழைத்துச் செல்லவில்லை ஆலயத்தின் உள்ளேதான் அழைத்து வந்துள்ளதென்பது உண்மை எம்மைச் சூழ்ந்திருக்கும் துன்ப துயரங்களுக்கு நாம் முகங்கொடுக்கவும், எம் விசுவாசத்தை உறுதிப்படுத்தி பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக மாறவும் விரும்புகிறோம்

**18; இம்மகாநாட்டிற்கு கத்தோலிக்க இறைமக்கள் என்னவிதமாக ஆயத்** [illegible]

# புதிய துணைவேந்தர் இம்மாதம் தெரிவாவார்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் யார் என்பது இம்மாத இறுதியில் தெரிந்துவிடும்.

இப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்கு நியமிக்க தகுதியான மூவரது பெயர்களை இப் பல்கலைக்கழகத்தின் பேரவை ஏற்கனவே சிபாரிசு செய்துள்ளது:

இப்பெயர்ப் பட்டியலையும் இப் பட்டியலில் உள்ளவர்களதுசுயவிபரக்கோவையையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக துணை வேந்தர் துரைராசா கொழும்புக்கு எடுத்துச் சென்றுள்ளார்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிசீலனைக்குப் பின்னர் ஜனாதிபதியினால் மேற்படி நியமனம் மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது இந்த நியமனம் குறித்த அறிவிப்பு பெரும்பாலும் இம்மாத இறுதியில் வெளிவரலாம் என்று கொழும்பில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க, நி)

### பிணையில் விடுதலை

(வடமராட்சி)

வட்டுக்கோட்டை இறாத்தலடியைச் சேர்ந்த ஒருவர் குற்ற முறையான அத்துமீறல் அச்சுறுத்தல் காரணமாகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளியாகக் காணப்பட்டார்-

வீரையா தெட்சணாமூர்த்தி என்பவரை பருத்தித்துறை நீதிமன்றம் குற்றவாளியாகக் காணப்பட்டு அவருக்கு 5 ஆயிரம் ரூபாவில் ஆறு மாத நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு நீதிபதி உத்தர விட்டார்- (யோ)

### ஔவையார் விழா

(கொழும்புத்துறை)

யாழ் கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் கோவிலில் மூன்றாவது வருடமாக ஏப்ரல் 7ஆம் திகதி வியாழக்கிழமை ஔவையார் விழா நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது-

அன்றைய தினம் ஔவையார்பற்றிய பேச்சுப்போட்டி, கவிதை, சிறுவர் கலை நிகழ்ச்சிகள் ஆகிய நிகழ்வுகள் நடைபெற சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டு வருகிறது- (24)

### மகாசிவராத்திரி

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு நல்லூர் கிறிசட்டநாதர் ஆலயத்தில் எதிர்வரும் வியாழனன்று சங்காபிஷேகம், விசேட பூசை, சமய சொற்பொழிவுகள் மற்றும் விசேட பஜனை என்பன இடம்பெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

### சிவராத்திரி பேச்சுப்போட்டி

(கொழும்புத்துறை)

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு வலி-தெற்கு பிரதேசசபைச்செயலாளர் பகுதியில் உள்ள பாடசாலைமாணவர்களிடையே பேச்சுப் போட்டி ஒன்று நடாத்தப்பட உள்ளது.

இப்போட்டியை இந்துசமயப் பேரவை மருதனார்மடம் கல்விக்கோட்டத்தின் உதவியுடன் நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர்தத்தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது;

போட்டி கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு. மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும்.

வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு சிவராத்திரிதினமான எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை சுன்னாகத்தில் இடம்பெறும்(24)

# நினைவு கூருகின்றோம்...

## 1994.03.05

1986ஆம் ஆண்டு இதேதினத்தில்வவுனியா- ஆலங்குளம், கன்னாட்டிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

திறவனை சந்திக்கும் பாத்தி ரங்கள்' எனும் நிகழ்வும்நடை பெறும்,

## ஆக்க ஓவியம் வரைதல் போட்டி

அனைத்து ஆசிரியர்களுக்கு மான ஆக்க ஓவியப்போட்டி பரியோவான் அக்கடமி, யாழ் இந்துக் கல்லூரி, சாவகச் சேரி மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் எதிர்வரும் பத் தாம் திகதியன்று காலை ஒன்பது மணிமுதல் பன்னி ரண்டு மணிவரை நடத்தப் படவுள்ளது;

## சேவைநலன் பாராட்டு

தென்மராட்சி இந்து இளை ஞர் மன்றத்தினர் சாவகச் சேரி நகராட்சி மன்ற விசேட ஆணையாளராககடந்தஐந்து ஆண்டுகளாக கடமையாற்றி ஓய்வுபெறும் த; நவரத்தின ராசாவின் சேவை நலனைப் பாராட்டி கேடயம் ஒன்றை வழங்கவுள்ளனர். (86)

## சைக்கிள்களுக்கு இலக்கத்தகடுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையில் சைக்கிள் நம்பர் தகடுகள் வழங்கும் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. இப் பிரதேச சபையின் புலோலி உப அலுவலகம், குடத்தனை உப-அலுவலகம் செம்பியன்பற்று உப-அலுவல கம் ஆகிய அலுவலகங்களில் இச் சைக்கிள் நம்பர் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின் றன; (25)

## வைத்திய சேவை மேலும் நீடிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலிலும் மா முனையிலும் வழங்கி வந்த இலவச சித்த ஆயுர் வேத வைத்தியசேவைகளைமேலும் இரண்டு நாட்களினால் அதி கரித்துள்ளதாக அறிவித்துள் ளது; (25)

ஜேர்மன் ஜனநாயக குடி யரசின் உதவித்திட்டத்தின் கீழ் அறவழிப் போராட்டக் குழுவினரால் நடாத்தப்படும் அறவழிப்பயிலகத்தில் தட் டெழுத்து, சைக்கிள் திருத்து தல், நீரிறைக்கும் இயந்திரம் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக் அறவழிப் போராட்டக்குழு வினரால் நடாத்தப்படும்இப் பயிற்சிநெறிகளில் பங்குபற்ற விரும்பும் பயிற்சியாளர்கள் நேரில் அறவழிசெயலகத்து டன் தொடர்பு கொள்ளு மாறு தெரிவிக்கப்பட்டுள்ளது (24)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி றோசாறி கியோமர்

பிறப்பு: 18-11-1950 அழிப்பு: 05-12-1993

அன்பே ஆருயிரே! அன்பான அம்மாவே!
ஆருயிர்த் தங்கையே!

உங்கள் அன்புமுகம் காணத் துடிக்கின்றோம்; எங்களுக்கு எதுவிதக் குறையுமின்றிச் சீராட்டி, மடி மீதிருத்தி வளர்த்தீர்களே: எங்கள் வாழ்வு முழுவதும் உங்கள் அரவணைப்பில் இருப்போம் என்று நினைத் திருக்கக் கடவுள் உங்களைக் குண்டு வடிவில் பறித் தெடுத்தார் கதறியே துடிக்கின்றோம் செய்வதறி யாது திகைக்கின்றோம். மாதங்கள் மூன்று ஆனதோ ஆறவில்லை எம்மனம்.

என்றும் உங்களைக் காணத் துடிக்கும்

கணவர், பிள்ளைகள்
உடன்பிறப்புக்கள்.

3-ம் குறுக்குத்தெரு,
பாஷையூர்;

(7657)

## 18; இம்மகாநாட்டிற்கு கத்தோலிக்க இறைமக்கள் என்னவிதமாக ஆயத் தம் செய்யப்பட்டார்கள்?

பலவிதமான ஆயத்தங்கள் செய்யப்பட்டன சுற்று மடல்கள், கடிதங்கள், கருத்தரங்குகள், ஞாயிறு மறை உரைகள் என்பவற்றின் வழியாக ஆயத்தங்களும் விளக் கங்களும் செய்யப்பட்டன இவற்றைவிட சிறப்பான விதமாக கடந்த ஐப்பசி மாதம்3-ம்நாள் ஞாயிறுவாரம் மகாநாட்டிற்கான ''எழுச்சி ஞாயிறு'' ஆக மறை மா வட்டத்தின் பங்குகள் தோறும் அனுஷ்டிக்கப்பட்டது மகாநாட்டின் திறமையான முடிவிற்காக ஒவ்வொரு நாளும் சொல்லப்படவேண்டிய செபம் அறிமுகப்படுத் தப்பட்டது மகாநாட்டிற்கான எழுச்சி ஞாயிறைத் தொடர்ந்து ''புதுப்புனல்'' விழிப்புணர்ச்சி வாரம் மேற்கொள்ளப்பட்டது

## 19 ''புதுப்புனல்''விழிப்புணர்ச்சிவாரம் பற்றி சற்று விளக்கமாகச் சொல்லுங்கள்?

புதுப்புனல் என்பது புதிய நீர் ஊற்று என்னும் கருப்பொருளில் எடுக்கப்பட்டது

**யாழ் மறைமாவட்டத்தில் ஓர் புதியநீர் ஊற்று தன்னை புதுப்பித்து மகிர தேவைப்படுகிறது.**

என்பதைத் தெளிவுபடுத்தும் விதமாக இப்புதுப் புனல் விழிப்புணர்ச்சி வாரம் மேற்கொள்ளப்பட்டது ''புதுப் புனலில் பூத்துவரும் பூஞ்சுடரே வாரும் புதி தொளியை வீசிவிளங்கும் புது வாழ்வைத் தாரும். நாமெல்லாம் ஒன்றாகி ஒளியுப்பாய் வாழ்ந்திருந்து, நற்செய்தி பகிர்ந்தளிக்க நல்லறிவைக் கூறும்'' என்று மேய்ப்புப்பணி மகாநாட்டுக் கீதமும் இயற்றப்பட்டுள் ளது.

அன்பளிப்பு;

யாழ்ப்பாணம் மறைமாவட்ட
பொது நிலையினர் கழகம்
ஆயர்இல்லம்
யாழ்ப்பாணம்

பொது மக்கள் தொடர்புக் குழு
மேய்ப்புப் பணி மகாநாடு

(சி-8770

ஆம் ஆண்டு இதேதினத்தில்வவுனியா- ஆலங் குளம், கன்னாட்டிப் பகுதியிற் சிறிலங்கா இராணு வத்தினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**சுதாகர்** ( - சுப்பிரமணியம் -பம்பைமடு -வவுனியா)

இதே சம்பவத்தின் போது கொலையுண்ட பல தமிழர்கள்,

1987ஆம் ஆண்டு யாழ்-வல்வை தொண்டமனாற் றுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**நிருபன்** (வெற்றிவேல்பிள்ளை இதயவேல்-சாஸ் திரிகூழாங்குளம் - வவுனியா)

**கமல்** (கபிரியேற்பிள்ளை கிறிஸ்துராசா - தோமஸ் வீதி, பருத்தித்துறை - யாழ்)

1988ஆம் ஆண்டு மொறவெவப் பகுதியில் இந்தி யப்படையினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மகன்,

1989ஆம் ஆண்டு மணலாறு - குமுழமுனைப் பகு தியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சூரன்** (அருணாசலம் சுரேந்திரராசா -4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - மணலாறு)

கிளி- ஆனையிறவு, சுண்டிக்குளம் பகுதியில் இந்தி யப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**நிசாந்தன்** (யோகரத்தினம் பிரதாபன் - தெணிய ம்பை, வல்வெட்டித்துறை - யாழ்)

யாழ் மானிப்பாய் நவாலிப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கரடிய னாறு இராஜபுரம் கித்துள் பகுதிகளைச் சேர்ந்த 02 தமிழர்கள்;

1992ஆம்ஆண்டு யாழ்-வடமராட்சி, கட்டைக்காடு முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இரா ணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். வேந்தன்-வின்சன்** (அமிர்தநாதன் அலஸ்ரின் - பள்ளத்தோட்டம் - திருமலை)

**லெப். கலைஞன்-நித்தியா** (சின்னப்பிள்ளை பாஸ்கரன் - இத்தாவில் - பளை)

**வீரபாண்டியன்-ஜூலியட்** (இம்மானுவேல் தெய் வேந்திரன் - தொடர்மாடி, குருநகர் - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8767)

யாழ்ப்பாணம்

கல்வி அமைச்சின் கட்டட வேலைகள்

# மாகாண பொறியியலாளர் பொறுப்பில்விட பணிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கட்டட வேலைகளை மாகாணப் பொறியியல் சேவைகள் அமைச்சிடம் உடனடியாகக் கையளிக்கும்படி மாகாண ஆளுநர் பணித்துள்ளார்; இது தொடர்பான சுற்றுநிருபம் அனைத்து வட கிழக்கு மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபம் ஒன்றில் கல்வி அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மாகாணப் பொறியியல்சேவைகள் அமைச்சுக்கு மாற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக தெரிவு விரைவில் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

1992-93 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதியில் படிப்புத்துறை தவிர்ந்த ஏனைய துறைகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு ஐந்து வித அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இத்துறைகளில் தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர் விபரங்கள் வெகு விரைவில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (05)

# மட்பாண்ட தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தது

ஒட்டுசுட்டான் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் கொழும்பு உயர் அதிகாரிகளின் அனுமதி கிடைக்கப் பெற்றதையடுத்து மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.


இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதை யடுத்து மூன்று வருடங்களுக்கு மேலாக செயலிழந்து இருந்த இக் கூட்டுத்தாபனம் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உற்பத்திகளைச் செய்து வருகிறது.

இக் கூட்டுத்தாபனம் செயலிழந்த போது பல ஊழியர்கள் தென்பகுதிக்கு இடமாற்றம் பெற்றிருந்தனர். தற்போது குறிப்பிட்ட குறைந்தளவு ஊழியர்களைக் கொண்டே கூட்டுத்தாபனம் இயங்கி வருகிறது.

## ஓய்வூதிய வவுச்சர்

யாழ். மாவட்டத்திற்கான உள்ளூராட்சிஓய்வூதியர்களின் மாசி மாத பென்சன் வவுச்சர்கள் கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன. ரயில்வேஓய்வூதியர்களுக்கான பென்சன்வவுச்சர்களும் வந்து சேர்ந்துள்ளதாகத்தெரியவருகிறது. (41)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



# பல திருட்டுக்களின் சூத்திரதாரிகள் சுண்ணாகம் நீதிமன்றில் ஆஜர்

## 23 குற்றச்சாட்டுகளை ஏற்றனர்

வலிகாமம் பகுதிசுண்ணாகநீதிமன்ற எல்லைக்குள் பல வகையான திருட்டுக்களை பல்வேறு இடங்களில் புரிந்தும் அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் என்றதன் பேரிலும் தமிழீழ காவல் துறையினரால் ரவீந்திரன், விக்னேஸ்வரன், பரன், சங்கர் ஆகிய நால்வர் மீது 23 திருட்டுக குற்றக் சாட்டுகள் சுமத்தப்பட்டு தமிழீழ மாவட்ட நீதிமன்றுசுண்ணாகத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள்மீது, சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளின் விபரம் வருமாறு:-

129-93 வழக்கு இலக்கத்தில் தி. சங்கர், த. விக்னேஸ்வரன் என்பவர்கள் சந்திரகுமார் என்பவருக்கு சொந்தமான ஏசியா இனத்தைச் சேர்ந்த ரூபா 12,000 பெறுமதியான துவிச்சக்கர வண்டியை திருடியதாகவும்

130-93 வழக்கில் தி. சங்கர், த விக்னேஸ்வரன். பரன் ஆகிய மூவரும் ஜெயக்குமார் என்பவருடைய எரிபொருள் கடையை உடைத்து 60 லீற்றர் மண்ணெண்ணெயும், 70 கட்டி சவர்க்காரம் திருடியதாகவும்,

131-93 வழக்கில் வை. ரவீந்திரன்,, விக்னேஸ்வரன், த. பரன், தி. சங்கர் ஆகிய நால்வரும் உதயகுமார் என்பவருக்குச் சொந்தமான 22,000ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் திருடியதாகவும்,

132-93 வழக்கில் தி. சங்கர் த. பரன் ஆகிய இருவரும் த. பாஸ்கரன் என்பவருக்குச் சொந்தமான 22,000 ரூபா பெறுமதியான மினிபஸ்ஸின் இரு மின்கலங்களைத் திருடியதாகவும்,

133-93 வழக்கில் வை. ரவீந்திரன் என்பவர் த. பாஸ்கரனுக்குச் சொந்தமான மினிபஸ்ஸின் இரு மின்கலங்களினுள் ஒன்றை களவாடப்பட்டபொருள் எனத்தெரிந்து கொண்டு வாங்கி வைத்திருந்து உதவியமையாலும்,

134-93 வழக்கில் வை. ரவீந்திரன், த. பரன், தி, சங்கர் என்பவர்கள் ஜெயராசன் என்பவருக்குச் சொந்தமான

தாகவும்,

138-93 வழக்கில் தி. சங்கர். த. பரன் ஆகிய இருவரும் சி. தனஞ்சயன் என்பவருக்கு சொந்தமான வீட்டில் இருந்து நஷனல் பொக்கற் வானொலிப்பெட்டி, துவிச்சக்கர வண்டியின் மின்பிறப்பாக்கி (டைனமோ கட்டை) திருடியதாகவும்

139-93 வழக்கில் தி. சங்கர், த. பரன் ஆகிய இருவரும் செ. சுகந்தன் என்பவருக்குச் சொந்தமான துவிச்சக்கர வண்டியின் சீற், முன்றிம் திருடியதாகவும்

140-93 வழக்கில் தி. சங்கர், த. பரன் ஆகிய இருவரும் செ. சிவஞானம் என்பவருக்குச் சொந்தமான 1000 ரூபா பெறுமதியான இருசக்கர இழுபொறி இயந்திரத்தின் (வான்மாஸ்ரர்) டீசல் மூடியைத் திருடியதாகவும்

141-93 வழக்கில் தி. சங்கர், த. பரன் ஆகிய இருவரும் க. விக்னேஸ்வரன் என்பவருக்குச் சொந்தமான வீட்டில் இருந்த ரூபா 1600 பெறுமதியான புட்வால்வுடன் கூடிய எஸ்லோன் பைப்பினை திருடியதாகவும்

142-93 வழக்கில் தி. சங்கர், த. பரன் ஆகிய இருவரும் குலரத்தினசேகரம் என்பவருக்குச் சொந்தமான 5,500 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் மின் இயந்திரம் திருடியதாகவும்,

144-93 வழக்கில் வை. ரவீந்திரன் என்பவர் மா. ஜெயக்குமார் என்பவருடைய எரிபொருள் விற்பனை நிலையத்தில் இருந்த எரிபொருட்களை த. பரன், த விக்கி ஆகியோர்கள் திருடுவதற்கு கொள்கலன், பைப்போன்றவற்றை கொடுத்து உதவியதாகவும்,

145-93 வழக்கில் த. பரன் என்பவர் மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் பொருத்தப்பட்டு இருந்த 6500 ரூபா பெறுமதியான ஒலிபெருக்கியின் யூனிட் திருடியதாகவும்,

146-93 வழக்கில் தி சங்கர் த. பரன் என்பவர்கள் தி. தனஞ்சயனுக்கு சொந்தமான வீட்டில் நின்ற துவிச்

பெறுமதியான யூனிற்றினை களவாடப்பட்ட பொருள் எனத் தெரிந்துகொண்டு வாங்கி உதவியதாகவும்

154-93 வழக்கில் த. விக்கினேஸ்வரன் என்பவர் திருடப்பட்ட துவிச்சக்கரவண்டியின் டைனமோ எனத்தெரிந்துகொண்டும் பாவனையில் வைத்திருந்து உதவியதாகவும்

159-93 வழக்கில் த. விக்கினேஸ்வரன், த. பரன், தி. சங்கர் ஆகிய மூவரும் திருமதி வி. இந்திராணி என்பவருடைய 2000 ரூபா பெறுமதியான மரக்கறி வகைகளைக் கடையுடைத்துத் திருடியதாகவும்

160-93 வழக்கில் வை. ரவீந்திரன் களவுப்பொருள் எனத் தெரிந்தும் களவாடப்பட்ட கெற்றலற்றை பாவனையில் வைத்திருந்தமை போன்ற 23 குற்றச்சாட்டுக்கள் நால்வர் மீதும் சுமத்தப்பட்டன.

இவர்கள் திருட்டுக்குற்றத்திற்கும், உடந்தைக் குற்றத்திற்கும், ஆவணத்தை வைத்திருந்த குற்றத்திற்கும் முறையே தமிழீழ சட்டக்கோவை 11 அ(1), 11 அ(3). 11 அ (34) போன்ற பிரிவுகளுக்கமைய வரையப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நீங்கள் ஏன் தண்டிக்கப்படக்கூடாது இக்குற்றச்சாட்டுக்கள் 23 லும் தாங்கள் குற்றவாளி என மன்றின் முன்னிலையில் சந்தேக நபர்கள் நால்வரும் ஏற்றுக்கொண்டனர். ஆயினும் 130-93 எனும் வழக்கில் 60லீற்றர் மண்ணெண்ணெய் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டபோதும் குற்றம்சாட்டப்பட்ட தி. சங்கர், த. விக்கினேஸ்வரன், த. பரன் ஆகிய மூவரும் தாங்கள் 20 லீற்றர் மண்ணெண்ணெய் மட்டுமே திருடியதாக மன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கை விசாரித்த சுண்ணாகம் மாவட்டநீதியாளரான செல்வி எழில்மதி தனது தீர்ப்பில் கூறுகையில் இங்கு குற்றம் சாட்டப்பட்ட தி. சங்கர், த. பரன், த. விக்கினேஸ்வரன், வை ரவீந்திரன் ஆகிய நால்வரும் ஒருமுறை

களேதான் எடுத்தார்கள் என மன்றில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வழக்காளி பக்கத்தையே சாரும். அதனை அவர்கள் நிரூபிக்காத பட்சத்தில் மன்று இவர்கள் 20லீற்றர் மண்ணெண்ணெய் திருடியதையே கவனத்தில் கொள்கிறது எனத் தெரிவித்தார்.

மேலும் இங்கு கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருட்கள் உரியவர்களுக்கு தகுந்த அடையாளம் காட்டிய பின்னர் மன்று ஒப்படைக்கும் என்றும் 20 லீற்றர் மண்ணெண்ணெய் குஇழப்பீடாக அக்குற்றத்தில் ஈடுபட்ட மூவரும் ஆளுக்கு 533-30 சதவீதம் மன்றில செலுத்த வேண்டும் என்றும் இவை உரியவருக்கு ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்தார். இதே போலவே 159/93 வழக்கில் 2000 ரூபா பெறுமதியான மரக்கறி வகைகளை திருடிய இருவரும் ஆளுக்கு 1000ரூபா வீதம் மன்றில் இழப்பீடாக செலுத்த வேண்டும் எனவும் அவை உரியவருக்கு ஒப்படைக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்,

இக்குற்றம் தொடர்பாக, நீதியாளரின் தீர்ப்பில், குற்றம் சாட்டப்பட்ட நால்வரில் தி. சங்கர், த. பரன் ஆகிய இருவருமே நேரடியாக அதிகமான திருட்டுச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். அதே போன்று ரவீந்திரன், விக்கினேஸ்வரன் ஆகிய இருவரும் மேற்குறிப்பிட்ட இருவரிலும் விட நேரடியாக திருட்டு செயலில் பங்குபற்றியது குறைவாக இருந்தாலும் அக்குற்றத்திற்கு உடந்தையாக செயல்பட்டு வந்துள்ளதை மன்று கவனத்தில் எடுக்கக் கூடியதாய் உள்ளது எனத் தெரிவித்தார். மேலும் இத் திருட்டுக் குற்றங்களின் பொருள் பெறுமதியை ஆராயுமிடத்து வை. ரவீந்திரன் என்பவரின் குற்றச்செயல் தொடர்பான பொருட்களின் பெறுமதி 64,800 ரூபாவாகும். அடுத்த குற்றவாளியான தி. சங்கர் என்பவரின் குற்றச் செயல் தொடர்பான பொருட்களின் பெறுமதி 83,600 ரூபாவாகும். த. பரன் என்பவருடைய குற்றச் செயல் தொடர்பான பொருட்களின் பெறுமதி 78,000

## நேர்முகப்பரீட்சை

(கொழும்புத்துறை)

கொழும்பு மதுவரித்திணைக்கள ஆணையாளர் திரு, டபிள்யூ. என், எவ். சந்திரரத்தினாவால் வெளியிடப்பட்ட வர்த்தமானிதிகதி 21-01-94 இன்பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மது வரிப்பரிசோதகர் பதவிக்கான ஆரம்ப நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமையும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 9ஆம் திகதி புதன்கிழமையும் காலை 9.00 மணிக்கு இல. 665/1, கடற்கரை வீதி, குருநகரில் உள்ள யாழ். மாவட்ட மது வரித்திணைக்கள உதவி ஆணையாளர் பணிமனையில் இடம்பெறும் என உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ் நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த 28ஆம் திகதி திங்கட்கிழமை கடிதங்கள் அனுப்பி வைக்கப்படடுள்ளதென்றும், கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள சகல ஆவணங்களுடன்குறித்த திகதியில் சமுகம் தருமாறு அவர் தெரிவித்துள்ளார். (24)

## பிறப்புசான்றுபத்திரம் வழங்கல் மீள ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் 1954-ம் ஆண்டின் பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை வழங்கும் வேலைகள் மீண்டும் நடைபெற்றுவருகின்றன. 1954-ம் ஆண்டின் பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை வழங்கும் படிவங்கள் இவ் அலுவலகத்திற்கு வந்து சேராமையால் இப்பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை வழங்கும் வேலைகளை பருத்தித்துறை பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகம் நிறுத்தி வைத்திருந்தது. (25)

## பிளாஸ்டிக் வாளிகள் வழங்கப்பட்டன

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபையின் சார்பில் இயங்கும் இரு சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகட்கும், ஒன்பதுபாலர் பாடசாலைகளுக்கும் குடிநீர் பாவனைக்காக பிளாஸ்டிக் வாளிகள் மேற்படி பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ளன

சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர் நலன்கருதியும், சிறுவர் பாடசாலையில் கல்வி கற்கும் சிறார்களின் நலன்கருதியும் சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்குடன் இவ் வாளிகள்



வீரவேங்கை

## வீரபாண்டியன் யூலியன்

(இம்மானுவேல் செல்வேந்திரன் குருஸ்)

| தாயின் மடியில் பிறப்பாய் | தாயக மண்ணின் விடிவுக்காய் |
|---|---|
| 27-11-1974 | 05-03-1992 |

பேரிகை கொட்டி ஆனையிறவு வழியாகப் புகவந்த
கூலிப்படையைப் புறமுதுகிட்டு ஓடவைத்த
கட்டைக்காட்டுச் சமரில் காவியம் படைத்தவனே
தோழர்களால் வீரபாண்டியன் எனப்பெயர்
பெற்றாய் ஆண்டிரண்டு முடிந்ததின்று
மெல்லென இருந்தாற்போல் சொல்லாமல்
கொள்ளாமல் தமிழீழம் மலராது, தமிழீழ மலர்வுக்கு
நெய்வார்க்க உன்னைப்போல் பல்லாயிரம்
வேங்கைகள் அணிவகுப்பர் காவியமான உன்
கற்பனை தமிழீழம் மெய்ப்பிக்கும்
உன்கனவு நனவாகும்.

இவருடன் களத்தில் அன்று வீரச்சாவடைந்த சகபோராளிகளான லெப்டினன்ட் வேந்தன் (திருகோணமலை), லெப்டினன்ட் நித்தியா (இத்தாவில் பளை) இவர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| 6 C, தொடர்மாடி, | தாய், சகோதர, சகோதரிகள், |
| குருநகர், | மருமக்கள், அத்தான், மச்சான், |
| யாழ்ப்பாணம். | உற்றார், உறவினர், நண்பர்கள். |
| (இ-8768) | (பி. ஐ பர்னான்டோ ஸ்தாபனத்தார்) |

கடைச்சல் பட்டறையில் இருந்த 3000 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தின் வீல் திருடியதாகவும்,

135-93 வழக்கில் தி. சங்கர் த. பரன் ஆகிய இருவரும் இ. ஸ்ரீமகேஸ்வரன் என்பவருக்குச் சொந்தமான ஜெனரேற்றரில் இருந்து 1500 ரூபா பெறுமதியான மின்மாற்றி ஒன்றைத் திருடியதாகவும்,

136-93 வழக்கில் தி. சங்கர், த. பரன், செ. யோகராசா என்பவருக்கு சொந்தமான மின் இயந்திரத்தில் இருந்து 2000 ரூபா பெறுமதியான மின்மாற்றி (கொன்டெஞ்சர்) ஒன்றைத் திருடியதாகவும்,

137-93 வழக்கில் தி. சங்கர் த. பரன், த. விக்னேஸ்வரன் ஆகிய மூவரும் பா. வைத்திலிங்கம் என்பவருக்கு வீட்டில் இருந்த 1000 ரூபா பெறுமதியான இரு நிறைகுடம் இரு குத்துவிளக்கு திருடிய சக்கர வண்டியின் 600 ரூபா பெறுமதியான செற்லைற் ஒன்றினைத்திருடியதாகவும்,

147-93 வழக்கில் வை. ரவீந்திரன் என்பவர் குலரத்தினசேகரம் என்பவருக்குச்சொந்தமான 5,500 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் மின் இயந்திரம் ஒன்றினை திருடப்பட்ட பொருள் எனத் தெரிந்தும் வாங்கி வைத்திருந்த உதவியமையும்,

150-93 வழக்கில் வை. ரவீந்திரன் என்பவர் இ. சந்திரகுமார் என்பவருக்கு சொந்தமான ரூபா 12,000 பெறுமதியான துவிச்சக்கர வண்டியை த. விக்கி, தி. சங்கர் ஆகியோர்கள் திருடுவதற்கு திட்டம் வகுத்துக் கொடுத்ததாகவும்,

151-93 வழக்கில் வை. ரவீந்திரன் என்பவர் மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில்பொருத்தப்பட்டிருந்தஒலிபெருக்கியின் 6,500 ரூபா

களில் வேறுவேறு நபர்களுக்குச் சொந்தமான பொருட்களைத் திட்டமிட்டு திருடுவதையே தொழிலாகக் கொண்டு செயற்பட்டுள்ளனர் என்பதை இம்மன்று தெளிவாகக் காண்கிறது என்றார். அத்தோடு இங்கு குற்றவாளிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றங்கள் யாவற்றுக்கும் தெளிவான முழுமையான குற்ற ஒப்புதல்செய்யப்பட்டு இருந்தன. ஆயினும் 130-93 வழக்கில் தி. சங்கர், த. விக்கினேஸ்வரன், த. பரன் ஆகிய மூவரும்குற்றப்பத்திரத்தில் 60 லீற்றர் மண்ணெண்ணெய் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும் தாங்கள் 20 லீற்றர் மண்ணெண்ணெயே திருடியதாக குற்ற ஒப்புதல்செய்துள்ளனர்

இதனை மன்று கவனத்தில் எடுத்து மிகுதி 40 லீற்றர் மண்ணெண்ணெயும் இவர்

ரூபாவாகும். இறுதியான த. விக்னேஸ்வரனின் குற்றச் செயல் தொடர்பான பொருட்களின் பெறுமதி 44,400 ரூபாவாகும். எனவே இககுற்றத்தை ஒரு தொழில் போல் செய்தமையால் பாரிய குற்றமாக மன்று கணித்து இந்த நால்வருக்கும் 9 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் 1-ம் குற்றவாளியான தி. சங்கர் என்ற குற்றவாளிக்கு 35,000/- குற்றப்பணமும், 2-ம் குற்றவாளியான த. பரன் என்பவருக்கு 30,000/- குற்றப்பணமும், 3-ம் குற்றவாளியான வை. ரவீந்திரனுக்கு 27,000 ரூபா குற்றப்பணமும், 4-ம் குற்றவாளியான த. விக்கினேஸ்வரனுக்கு 22,000 ரூபா குற்றப்பணமும் விதிக்கப்படுவதாக தீர்ப்புவழங்கப்பட்டது.

வழங்கப்பட்டுள்ளதனால்சுகாதாரத்தைபேணிப்பாதுகாக்க ஏதுவாக அமைந்துள்ளன.

## தளபாடங்கள் வழங்கப்பட்டன

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும் இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதி வாய்ந்த மரத்தளபாடங்கள் அவற்றின் தேவைகளுக்கேற்ப மேற்படிபிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ளன.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையாக கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்த மரத்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சுழிபுரம் உபஅலுவலகம், சங்கானை உபஅலுவலகம், வட்டுக்கோட்டை உப அலுவலகங்களை ஆகியவற்றில்இயங்கி வரும் ஆயுர் வேத வைத்தியசாலைகளின் பாவனைக்காக பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ளதென பிரதேசச் சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (41)

## மீட்டல் வகுப்புகளுக்கு வெளிச்ச வசதி

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த திருநெல்வேலி பாற்பண்ணை சனசமூக நிலையத்திலும், மகாத்மா காந்தி சனசமூக நிலைய மண்டபத்திலும் இயங்கி வரும் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் இரவு நேர மீட்டல் (சுயகல்வி) வகுப்புகள் பயன்மிகு முறையில் நடாத்தப்படுகின்றன. பெற்றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச வசதியுடன் இயங்கி வரும் மேற்படி வகுப்புகளுக்கான வெளிச்ச வசதியை மாணவர் அமைப்பினர் ஏற்படுத்தியுள்ளனர். இச்சிறப்புமிகு கல்விச் சேவையினால் பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் பெரும் பயனடைய வாய்ப்பு எட்டியுள்ளது. (41)

## நோய் பரவுவதை தடுக்க தீவிர நடவடிக்கை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை கொற்றாவத்தையிலும், பருத்தித்துறை புலோலி மேற்கிலும், கொலரா நோய்க்கான தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு நோய்பரவுவதற்கான காரணிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் கிணறுகளுக்கு குளோரின் இடும் நடவடிக்கைகளும் நோய்காணப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்பு மருந்துகள் வழங்கும் நடவடிக்கைகளும், சுகாதார ஆலோசனைகள் வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனையடுத்து நோய் பரவும் என அஞ்சி மூடப்பட்ட கொற்றாவத்தை அ. த. க. பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது. பொது மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கையாண்டு இந்நோய்களிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (25)

## பசாம் வாசிப்பு போட்டி

(குருநகர்)

யேசுக்கிறிஸ்துவின் திருப்பாடுகளை நினைவு கூரும் தவக்காலத்தை ஒட்டி குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த திரு. இருதய சபையினர் பசாம்வாசிக்கும் போட்டி ஒன்றை நடத்த முன்வந்துள்ளனர். (21)

## விதை நிலக்கடலை எடுத்துவரப்பட்டது

(தொல்புரம்)

நிலக்கடலை உற்பத்தியை பெருக்கவும், உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும், இதன் மூலம் நல்ல விளைச்சலைப் பெறும் பொருட்டும் யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு சமாசத்தினர் விதை நிலக்கடலையைக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

மேற்படி விதைநிலக்கடலை ஏக காலத்தில் பயிர்ச்செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. மேலும் இம்முறை ஆனைக்கோட்டை உயரப்புலத்திலுள்ள காணிகளில் பயிரிடப்பட்ட நிலக்கடலை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

## கிராமியஉற்பத்திக்குழு புனரமைக்கப் படுகிறது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய உற்பத்திக் குழுக்களை புனரமைப்பு செய்வதில் ஈடுபட்டுள்ளது. சுயசார்பு நோக்கிய பொருண்மிய மேம்பாட்டுத் திட்டத்தில் இனங்காணப்பட்டிருக்கும் பன்னிரண்டு துறைகளையும் மேலும் விருத்தி செய்யும் நோக்கில் கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களுக்கு பல்துறைகளிலும் பயிற்சிகள் வழங்குவதற்கும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
## 05 - 03 - 1994



செல்வி

### வர்ணகுலசிங்கம் ஹேசிகா (HESIKA)

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த வர்ணகுலசிங்கம் தனலட்சுமி தம்பதிகளின் தவப்புதல்வி ஹேசிகா தனது முதலாவது பிறந்தநாளை 5 - 3 - 1994 சனிக்கிழமை (இன்று) இல 21 கன்னார வீதியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, மாமன்மார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், மற்றும் உற்றார் உறவினர்களும், நண்பர்களும் நல்லூர் கந்தன் பேரருளினால் சகல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

(சி-8759) குடும்பத்தினர்.

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்
### இடமாற்றம்

அன்புடையீர்!

ஹோட்டல் ஞானம்சில் நடைபெறவிருந்த ஆண்டுப் பொதுச் சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம் மாற்றப்பட்டுள்ளது.

''மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்'' (பயிற்சிக் கல்லூரி), 14, மணிக்கூட்டுக் கோபுர வீதி (மகாத்மா காந்தி வீதி), (யாழ் மார்புநோய் சிகிச்சை நிலையத்துக்கும் ஹோட்டல் அசோகாவுக்கு அண்மையில்) 06-03-1994 காலை 9 30 மணிக்கு நிகழ்ச்சி நிரலின்படி கூட்டம் ஆரம்பமாகும் என்பதையும், இடமாற்றத்தால் ஏற்படும் சிரமத்துக்கு மன்னித்து அனைவரையும் வருக! வருக என அழைக்கின்றோம்.

நன்றி

தங்கள் நல்வரவை விரும்பும்

## இசை நடன வசந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை வழங்கும் 'இசை நடன வசந்தம்' இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். விஞ்ஞான சங்கத்தால் நடாத்தப்படவிருந்த காலை நிகழ்ச்சி நடைபெறாதெனவும் இது மாலையில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாடகத்துறையில் பயிலும் மாணவர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் மாணவர் ஒருவருக்கு மானிப்பாயில் இயங்கும் மறுமலர்ச்சிக் கழகத்தினால் இவ்வருடம் முதல் புலமைப் பரிசில் வழங்கப்பட உள்ளதாக இம் மன்றம் அறிவித்துள்ளது. அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற 21ஆம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (17)

## கத்தோலிக்ககுரவராக திருநிலைப்படுத்தல்

(நல்லூர்)

யாழ்ப்பாண பேராயத்தில் அண்மையில் அருட்சகோதரர் க. அருள்ராஜ், அருட்சகோதரர் ஏ. பி. அன்ரனி ப்பிள்ளை, அருட்சகோதரர் போல் றொகான் அருட்சகோதரர் கி. எம். எப். யோசப் அருள்ராஜா ஆகியோர் கத்தோலிக்க மதகுரவராக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களால் நடத்தப்பட்ட விசேட வழிபாட்டில் இவ்வாறு திருநிலைப்படுத்தப்பட்டனர். (17)

## கவின்கலைக் கல்லூரி ஆரம்பிக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் கவின்கலைக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வடமராட்சி மாலி சந்தியில் இருக்கும் கலை பண்பாட்டுக் கழக அலுவலகத்தில் இவ் அலுவலகம் செயற்படும் எனவும், இக் கல்லூரி தொடங்குவதற்கான ஆரம்ப ஏற்பா

## எம்பிலிப்பிட்டியாவில் சர்வதேச விமான நிலையம்

(கொழும்பு)

இரண்டாவது சர்வதேச விமான நிலையம் எம்பிலிப்பிட்டியாவில் மிகவிரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் காலியில் உள்ள துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்பட்டு சர்வதேச தரத்துக்கு மாற்றப்படவுள்ளது.

## பயிலுநர் ஆசிரியர் போதிக்கும் பாடம் மாற்ற கல்விச்சபை அனுமதிதேவை

(நல்லூர்)

பயிலுநர் ஆசிரியர்களாக தற்போது கடமையாற்றுபவர்கள் தமது கல்வித்தகைமை குறிப்பிட்டபாடத்தில் பொருத்தமற்றதாகக் காணப்பட்டால் இது தொடர்பாக அவர்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தை உரிய கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி கல்விப்பணிப் பாளரின் சிபார்சுடன் கல்விச்சபைக்கு அனுப்பி வைக்கப்படும் போது பரிசீலனைக்கு எடுக்கப்படும் எனவும் தகைமையற்ற பயிலுநர் ஆசிரியர்கள் தகைமையுள்ள பாடங்களைப் போதிக்க அனுமதிக்கப்படுவார்கள் என கல்விச்சேவை சுற்றறிக்கை இலக்கம் 93/5இன் மூலம் கல்விச்சேவைத்தலைவர் எஸ் ஏ. வீரரட்ன தெரிவித்துள்ளார்.

ஆனால் உதாரணமாக விஞ்ஞான பாட பயிலுநர் ஆசிரியராக கடமையாற்றும் பயிலுநர் ஆசிரியர் அப்பாடத்தில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருந்தால் அத்தகையவர் தமது நியமன விடயத்தை மாற்றுமாறு சமர்ப்பிக்கும் விண்ணப்பம் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (17)

## இன்றைய நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை தெற்கு பரமகுரு முதலிய பெருமான் ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும் இவ் உற்சவத்தின்போது விசேட அபிஷேகங்கள் மற்றும் பூசை ஆராதனை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

ஃ ஃ

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

உரும்பராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. வீரபத்திரனும் சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி போதனாசிரியர் அ. தம்பித்துரையும், விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த ம. பைரவியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகலில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் க. சந்தசாமி பிரதம விருந்தினராகவும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பை சேர்ந்த ந. இன்பன், வலி. கிழக்கு தென்பகுதிப நோ: கூ. ச தலைவர் வே. சின்னத்தம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

புலோலி மேற்கு பிரிவுக்கான உற்பத்திக் குழுக் கூட்டம் இன்று மாலை ஆறுமணியளவில் கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (யோ)

ஃ ஃ

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் இரண்டுமணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (யோ)

ஃ ஃ

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்


## பயிற்சி நெறிகள்

உதவி தாதி பயிற்சிநெறி, சுதேச மருத்துவ கலவையாளர் பயிற்சி நெறிகள் பதிவினை மேற்கொள்ளும்.

இறுதித் திகதி: 14 - 03 - 1994

### புளோரன்ஸ் நேர்ஸிங் ஸ்கூல்
(தான்சன் கல்வி நிலையம்)

மருதனாமடம். (சி-8772)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## விஞ்ஞானமாணி (விவசாயம்) பட்டப்படிப்பு கல்வியாண்டு 1993/94

### பொதுச்சேவை அலுவலர்களுக்கான அனுமதி

மேற்படி பட்டப்படிப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து என்னால் 1994 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். இது 04 ஆண்டுக் காலக் கற்கை நெறியாகும்.

### அனுமதிக்கான நிபந்தனைகள்

**1. வயது**

விண்ணப்பதாரி 1994 - 04 - 22 ஆம் திகதியன்று 45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

**2. கல்வித் தகைமைகள்**

(அ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கீழ்க் குறிப்பிட்ட பாடங்களில் ஒரே முறையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தாவரவியல் விலங்கியல் இரசாயனவியல்
பௌதிகவியல் விவசாயம்

அல்லது

பல்கலைக்கழக பீடச் சபையினாலும் மூதவையினாலும் அங்கீகரிக்கப்படத்தக்க பிற கல்வித் தகைமைகள்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு வருடத்திற்குக் குறையாத விவசாய டிப்ளோமா நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**3. அனுபவம்**

டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த பின்னர் விவசாயத் துறையில் 5 வருட அனுபவத்துடன் குறைந்தது நடுத்தர தொழினுட்ப தரத்தையும் அடைந்திருத்தல் வேண்டும்.

அனுமதி எழுத்துப் பரீட்சை மூலமும், வாய்மொழிப் பரீட்சை மூலமும் வழங்கப்படும் 1994 மே மாதம் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

யாழ் பல்கலைக்கழக பரீட்சைக்கிளை சிரேஷ்ட

(சி-8754) செயலர்

## கணணி புரோகிராமர்கள்

# தேவை

## (COMPUTER PROGRAMERS WANTED)

எமது நிறுவனத்தில் கணணிக்கான நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்கள் தேவை. கற்பிக்கும் அனுபவம் உள்ளவர்களிற்கும் முன் அனுபவம் உள்ளவர்களிற்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமைகள், திறமைகளிற்கான விபரங்களையும் அடக்கி, உங்கள் சுயவிபரத்தையும் அனுப்பி வைக்கவும்.

சம்பளம் : பேசித் தீர்மானிக்கலாம்.

முகவரி: விள. இலக்கம் - 316
மே / பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்.

(7660)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால்

05 - 03 - 1994 இல் நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு 12 - 03 - 1994 சனிக்கிழமை கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டியன்று சீட்டிழுப்பு நடைபெறவுள்ளது.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

(சி-8771)

குளத்திற்கான ஆரம்ப ஏற்பாடுகள் இன்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படுமெனவும் கூறப்படுகிறது. (25)

## குடிசைகள் புனரமைப்பு

(தென்மராட்சி)

திருகோணமலை மாவட்டப்பிரிவின் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் பராமரிப்பின் கீழுள்ள மட்டுவில் லெப். கேணல் பொன்னம்மான் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் குடிசைகளைப் புனரமைக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது. அத்துடன் புதிய மாதிரியிலான குடிசைகளும் இங்கு அமைக்கப்பட்டு வருகின்றன. (86)

## முதலாவது திருப்பலி

யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் அண்மையில் திருநிலைப்படுத்தப் பட்ட இல்லாலை கிராமத்தைச் சேர்ந்த அருட்திரு போல் றொகான் அடிகள் தமது முதற் திவ்விய திருப்பலியை சங்கானை புனித சலேசியஸ் தேவாலயத்தில் இம்மாதம் ஆறாம் திகதி நிறைவேற்றி வைக்கவுள்ளார். இந்த வைபவத்தில் யாழ்ப்பாண மறை மாவட்டத்தைச் சேர்ந்த பல குருமார்களும் கலந்து கொள்ள வுள்ளனர்.

## பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழா

(தொல்புரம்)

தொல்புரம் செல்வா சனசமூக நிலையத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த வியாழன் அன்று மாலை நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் சு. பரன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (25)

ஃ ஃ

புலோலி புற்றளை மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் சி. தர்மலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

ஃ ஃ

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் உள நல சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறவுள்ளது.

ஃ ஃ

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று காலை 8.30 மணியளவில் கிளினர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக் கோட்டங்களை சேர்ந்த மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியிலும், இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. 6-ம், 8-ம், 10-ம் ஆண்டுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான போட்டிகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.

தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகலில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இதில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரனும், விசேட விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராசாவும், சிறப்பு விருந்தினர்களாக பங்குத் தந்தை ஆர். எம் ஜி. நேசநாயகம், கடற்புலிகளைச் சேர்ந்த பூவேந்தன் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (17)

ஃ ஃ

யாழ். பிலவத்தை அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகலில் வீரபத்திரர் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை வட்டத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் மதி, முன்னாள் அதிபர்கி. தாமோதரம்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

ஃ ஃ

தையல் கண்காட்சியும், தையல் பொருள்களின் விற்பனையும் இன்று காலை ஒன்பது மணி தொடக்கம் கோப்பாய் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. றெட்பானா நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் அ. சத்தியோதய சர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் திருமதி எஸ். நவரத்தினம் பிரதம விருந்தினராகவும், நல்லூர் வட்டப் பொறுப்பாளர் வேந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக பரீட்சைக்கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்தும், உதவிப்பதிவாளர்/ விவசாயபீடம், கிளிநொச்சி அவர்களிடமிருந்தும் பெறப்படும் மேலதிக விபரங்களுடன் கூடிய விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்துதல் வேண்டும்.

தபால் மூலமாக விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையை சுயவிலாசமிடப்பட்ட முத்திரையிடப்பட்ட 23 x 10 cm அளவிலான கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர். (சி-8773)

யா- கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை

## கல்வி அபிவிருத்திக்கான

# கலை விழா

காலம்: 05-03-94 சனிக்கிழமை
மாலை 5-30 மணி

இடம்: பாடசாலை மைதானம்

## ★ நிகழ்ச்சிகள் ★

மங்கள இசை — கந்தரோடை நாகேந்திரம் குழுவினர்

பாண்ட் வாத்திய இசைக் கச்சேரி — மாணவர் குழு

யா - கொக்குவில் இந்துக்கல்லூரி

நாடகம்

'சந்தனக்காடு'

இன்னிசை கானங்கள்

ராஜன்ஸ் குழுவினர்

பொதுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

அனுமதிச்சீட்டுக்களை நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

விழாக் குழுவினர்

04-03-94 பழைய மாணவர் சங்கம்

நூற்றாண்டு நிறைவு 1893-1993 (சி-8765)

சிந்தனைக்கு

ஆசையிலிருந்து விடுபட்ட உள்ளம் கொண்ட விழிப்படைந்த மனிதனிடம் அச்சம் இடம் பெறாது

— கௌதம புத்தர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-03-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# பேரினவாதத்தின் புரட்டு

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் நிலைப்பாட்டை ஒற்றியதாக கனடாவிற்கான சிறிலங்காத் தூதுவரும், வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தம் பற்றி கனடா மக்களுக்கு விளக்கம் ஒன்றைக் கொடுக்க முனைந்துள்ளார். ''தமிழ் பேசும் மக்களுடன் அரசாங்கத்திற்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை; எமது நடவடிக்கை பயங்கரவாதிகளுக்கு எதிரானதே'' என்பதே அவர் வழங்கியுள்ள செய்தியாகும்.

இலங்கையில் இடம்பெற்று 10 வருடங்களுக்கு மேற்பட்ட யுத்தம் இனப்பிரச்சினையின் காரணமாக எழுந்தது என்ற உண்மையை டி பி விஜேதுங்கா மறுப்பதினால் ஏதும் புதிதாக நிகழ்ந்து விடப்போவதில்லை. அதாவது ஓர் இனத்தின் பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினையாக மாறிவிடப் போவதில்லை; கடந்த காலத்தில் சிங்கள ஆட்சித் தலைவர்களே இனப்பிரச்சினை என்பதை ஏற்றுக் கொண்டு உள்நாட்டில் 'தமிழ்த் தலைவர்' களுடனும், அண்டை நாடான இந்தியாவுடனும் உடன்பாடு செய்து கொண்டுள்ளனர்.

இதனை உலகம் நன்கு அறியும், அதற்கான ஆவணங்கள் கூட பெருமளவில் கைவசம் உள்ளன. இந்நிலையில், இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்பது டி.பி. விஜேதுங்காவினதும், அவரது அரசாங்கத்தினதும் பேரினவாதச் சிந்தனையின் வெளிப்பாட்டை உலகம் அறிவதற்கு உதவுமே ஒழிய தமிழர் பிரச்சினையை மறுப்பதற்கு உதவப் போவதில்லை.

அதிலும், இன்று கனடாவில் பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்கள் அகதிகளாகவுள்ளனர். சிறிலங்கா அரசின் இனவாதப் போக்கினால், இலங்கையில் வாழ முடியாது, உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற நிலையிலேயே அவர்கள் கனடாவிற்குச் சென்றுள்ளனர். இந்நிலையில், இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனக் கனடா மக்களுக்கு விளக்கம் அளிப்பதும், அதை அவர்கள் நம்ப வேண்டும் எனவும் எதிர்பார்ப்பது மடமையாகும்.

இதேவேளை, கனேடியத் தூதுவரின், தமிழ் மக்களுடன் போர் இல்லை, 'பயங்கரவாதிகளுடனேயே' போர் என்ற அறிவிப்பானது கடந்த கால வரலாற்றை மறைப்பதாகவே அமையும். இதற்கு பல்வேறு உதா

# தென்னையை நன்கு பராமரித்தால் தேவை பூர்த்தியாகும்

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் அன்றாட உணவில் தேங்காய் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. எமது மாவட்ட சுய தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது நாம் எமது தேவைகளுக்குப் பிறமாவட்டங்களை நம்பி இருக்க வேண்டிய நிலையில் உள்ளோம். தற்பொழுதுயாழ். மாவட்டத்திற்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டமையால் தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளது. அத்துடன் தென்னந்தோட்டங்கள் பராமரிப்பு அற்ற நிலையில் இருப்பதனாலும் உற்பத்தி மிகவும் குறைவடைந்ததுடன் வீட்டுத் தோட்டங்களில் உள்ள மரங்களும் பராமரிப்பின்றி இருப்பதனாலும் தென்னை மரங்களை விறகுத் தேவைக்குத் தறிப்பதனாலும் பொதுவாக தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதால் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது வீட்டுத் தோட்டங்களில் உள்ள தென்னை மரங்களை நல்ல முறையில் பசளை யிட்டுப் பராமரிப்பதன் மூலம் மக்கள் தமது வீட்டுத்தேவைகளை ஓரளவாவது பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

பெருந்தோட்டச் செய்கையாளர்களும் தங்கள் தோட்டங்களுக்கு பெரும்போக மழையுடன் உரப்பசளைகளைப் பிரயோகித்து உற்பத்தியை அதிகரிக்க ஆவன செய்வது அவசியமாகும். தென்னை உற்பத்தியைப் பெருக்கும் நல் நோக்குடன் கமநலச்சேவைத் திணைக்களம் முதிர்மரக் கலவைகளைத் தருவித்து கமநல சேவை நிலையங்களில் விற்பனை செய்கின்றது.

எனவேகாய்க்கும்தென்னை மரங்களுக்குமுதிர் கலவையை வாங்கி ஒரு மரத்திற்கு 2 1|2 கிலோ கிராம் வீதம் அடி மரத்தில் இருந்து 1 1|2 அடி தூரம் விட்டு அதிலிருந்து 4 1|2 அடி சுற்று வட்டத்தில் ஒரு வளமாகக் கொத்தி, கொத்திய பரப்பில் மேற்படி கலவையைத் தூவி மண்ணை மட்டப்படுத்தி அதன்மேல் அகற்றப்பட்ட களைகள், தென்னோலை, பொச்சு, அல்லது கிளிரிசிடியா, இப்பில் இப்பில் போன்றவை கிடைக்குமாயின் பத்திரக் கலவையாக இடுவது சிறந்ததாகும். இதனால் களைவளர்ச்சி கட்டுப்படுவதுடன் பசளையிடப்பட்ட பாத்தியில் உள்ள ஈரலிப்பு பாதுகாக்கப்படுவதுடன் மண் வெப்பநிலை குறைக்கப்பட்டு மேல் மண் உலர்வது தடுக்கப்பட்டு சேதனப் பொருள்களும் மண்ணில் அதிகரிக்கப்படுகின்றது.

இருவாட்டித் தரைகளுக்கு முதிர்மரக்கலவையில் 2கிலோ இடுவது போதுமானதாகும்.

## இளம் மரக்கலவை (வை. பி. எம்)

இக்கலவை கமநலசேவை நிலையங்களுக்கு கொண்டு வரப்படாமையால் நேரடிப் பசளைகளைக் கீழ் தரப்படும் முறையில் கலந்து இடலாம்;

| | | |
|---|---|---|
| அமோனியம் சல்பேற் | - 04 | பாகம் நிறுத்தல் அளவில் |
| சுப்பர் பொஸ்பேற் | - 02 | ,, ,, |
| மியூரேட் ஒப் பொட்டாஸ் | - 02 | ,, ,, |

(சேர்க்கை வீதம் ஏறத்தாழ 13: 12 :17 ஆகும்)

மேற்கூறப்பட்ட விகிதத்தில் தனித்தனி உரங்கள் கலக்கப்பட்டு நாற்றுகளுக்கும் இளம் கன்றுகளுக்கும் இடவேண்டிய அளவு பின்வருமாறு;

| காலம் | | அளவு |
|---|---|---|
| நாற்று நட்டு | 6 மாதங்களில் | 500 கிராம் |
| ,, | 1 வருடத்தில் | 600 ,, |
| ,, | 1 1\|2 ,, | 600 ,, |
| ,, | 2 ,, | 800 ,, |
| ,, | 2 1\|2 ,, | 800 ,, |
| ,, | 3 ,, | 1000 ,, |
| ,, | 3 1\|2 ,, | 1000 ,, |

4வது வருடம் தொடக்கம் காய்க்கும் வரை 1200 கிராம் (6மாதங்களுக்கு ஒருமுறை) வரண்ட வலயத்தில் சிறுபோகத்தில் உரமிடுவதாயின் நீர்ப்பாசனம் செய்வது மிகவும் முக்கியமாகும்.

### புதிய நாற்றுக்களை நடுவதாயின்

அடி உரமாக ஒவ்வொரு நடுகைக் குழிக்கும் 10 கிலோ நன்கு உக்கிய மாட்டு எருவை இட்டு, இளமரக்கன்றுக் கலவையில் (வை பி. எம்) ஒரு கிலோகிராமையும் இட்டுமேல் மண்ணுடன் நன்கு கலந்து விடுதல் வேண்டும்;

### நடப்பட்ட நாற்றுகளுக்கு உரமிடுவதாயின்

இளம் பருவத்தில் (1-1 1|2 வருடம் வரை) உரக்கலவை மரத்திற்கு அண்மையில் விசிறப்படல் வேண்டும். நாற்றின் அடியிலிருந்து சிறிது தள்ளி 1அடி தூரம வரை விசிறப்பட்டு மண்ணுடன் கலக்கப்பட வேண்டும். மரம் வளர வளர விசிறப்படும் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு பாளை விரியும் நேரத்தில் பசளையிடும் பரப்பும் 5 அடியாக அதிகரித்தல் அவசியம்;

### உரமிடப்படவேண்டிய காலம்

பொதுவாக மழை காலங்களில் மண் ஈரமாக இருக்கையில் உரக்கலவையை இடலாம். இலேசான மணல் பிரதேசங்களில் பெரும் மழையின் பின்பேஉரம்இடப்படுவதுசாலச்சிறந்தது வருடத்தில் இருமுறை உரக்கலவையை பிரித்து இட்டு சிறுபோகத்தில் நீர்ப்பாய்ச்சுதல் அவசியமாகும்.

த. சிவலோகநாதன்
உதவி விவசாய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

# தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்கு கச்சதீவை மீளப்பெற வேண்டும்

**- இரா. சனார்த்தனன்**

(சென்னை)

இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீளப்பெறுவதன் மூலம் மட்டுமே தமிழக மீனவர்களை சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலிருந்து பாதுகாக்கமுடியும். இவ்வாறு உலகத் தமிழர் சம்மேளனத் தலைவர் இரா. சனார்த்தனன் கூறியுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், இலங்கைக்கு கச்சதீவு கையளிக்கப்பட்ட 1974-ம் ஆண்டு முதல் தமிழக மீனவர் தாக்கப்படும் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தாக்குதல் ... கோரியிருக்க வேண்டும். இந்திய மத்திய அரசு போதிய அக்கறை எடுக்காத காரணத்தினாலேயே சுமார் 6000 க்கும் அதிகமான தமிழக கரையோரங்களைச் சேர்ந்த மீனவர்கள் வளைகுடா நாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடி சென்றிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# பாக். அரசாங்க சார்பு பத்திரிகை தாக்கப்பட்டது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரச ஆதரவு பத்திரிகை நிறுவனமொன்று இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளது இது ஒரு அரசியல் ரீதியான தாககுதல் என நிர்வாகம் தெரிவித்தது.

சுமார் 20 பேர் கொண்ட கோஷ்டி தளபாடங்களை அடித்து நொருக்கி அலுவலகத்தில் இருந்த உபகரணங்களையும் சேதப்படுத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடதுசாரி அவாமி தேசியக் கட்சி ஆதரவாளர்களே இத்

# அமெ. பொருள்கள் வாங்க ஜப்பான் மீது நிர்ப்பந்தம்

**அமெரிக்க அதிபர் தெரிவிப்பு**

அதிகளவில் அமெரிக்க பண்டங்களை, ஜப்பான் வாங்கிக் கொள்ள கட்டாயப்படுத்தும் வகையில் அமெரிக்கா தனது சுப்பர் 301ம் இலக்க வணிகத் தடை நடவடிக்கைகளைமீண்டும் உயிர்ப்பித்து புதுப்பித்து இருக்கிறது.

இந்த நடவடிக்கையின் மூலம் விற்பனைச் சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கும் எனவும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மேலும் அதிக தொழில வாய்ப்புகளை ஏற்படுத்தி சம்பள உயர்வுக்கு வழிகோலும் எனவும் அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே வர்த்தகம் தொடர்பாக நிலவிய கருத்து வேறுபாட்டைப் போக்க அதிபர்கள் நிலையில் கடந்த மாதத்தில் இடம்பெற்ற பேச்சுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் கிட்டவில்லை என்பது தெரிந்ததே.

அமெரிககாவுடனான வர்த்தகத்தில் ஜப்பான் ஆறாயிரம் கோடி டாலர் அளவுக்கு ஜப்பான் வணிக உபரியை பேணி வருவது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பற்றி கருத்து வெளியிட்ட ஜப்பானிய அதிகாரி ஒருவர் டோக்கியோவில் நடைபெறவுள்ள பேச்சுக்கள் வணிகத்துறையில் வாய்ப்புகள் பற்றி கண்டறியும் எனத் தெரிவித்தார்.

களுடன் போர் இல்லை, 'பயங்கரவாதிகளுடனேயே' போர் என்ற அறிவிப்பானது கடந்த கால வரலாற்றை மறைப்பதாகவே அமையும். இதற்கு பல்வேறு உதாரணங்கள் போதிய அளவில் உள்ளன. தமிழ்த் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை சுமார் 6000 விடுதலைப்புலிகள் வீரச்சாவை அடைந்துள்ளனர். ஆனால், சிறிலங்கா இராணுவத்தினராலும், ஏனைய ஆயுதப்படையினராலும் இக்காலப் பகுதியில் கொல்லப்பட்ட தமிழரின் எண்ணிக்கை 50,000க்கும் அதிகமாகும். இந்நிலையில் சிறிலங்கா அரசு யாருக்கு எதிராகப் போர் செய்கிறது?

மேலும், தமிழருக்கு எதிராகப் போரிடவில்லை எனக் கூறும் அரசாங்கம் வடக்கு பகுதி மீது பொருளாதார தடையும் எரிபொருள் தடையையும் விதித்துள்ளது ஏன்? இப்பொருளாதாரத் தடையும் எரிபொருள் தடையும் தமிழ் மக்களின் நடவடிக்கையைப் பாதிக்கவில்லையா? அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை முடக்கவில்லையா?

அத்தோடு சிறிலங்கா ஆயுதப்படையினர் மேற்கொள்ளும் குண்டு வீச்சு, எறிகணை வீச்சுத்தாக்குதல் காரணமாக தமிழ் மக்களின் உடைமைகள் அழியவில்லையா? அவர்களின் தொழில் நிலையங்கள் பாதிக்கப்படவில்லையா? அவர்கள் தமது நிலங்களில் இருந்து விரட்டப்படவில்லையா?

மேலும், இலங்கையின் பல பகுதியிலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படவில்லையா? சித்திரவதை செய்யப்படவில்லையா? சிறைகளில் அடைக்கப்படவில்லையா? இவர்கள் தமிழர் என்ற ஒரே காரணத்தைத் தவிர வேறு எதற்காக இவற்றை அனுபவிக்க வேண்டி வந்தது?. அத்தோடு, இதுவரை சிறைகளை நிரப்பிய ஆயிரக்கணக்கான இளைஞர்களில் எத்தனை வீதத்தினர் அல்லது எத்தனை பேர் அரசாங்கம் கூறும் 'பயங்கரவாதிகள்' என்பதை வெளியிட முடியுமா?

அதாவது, தமிழ் மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாத்தை கட்டவிழ்த்து விட்டு அவர்களின் அன்றாட வாழ்வையே பாதிப்பிற்கும், துயருக்கும் உள்ளாக்கியுள்ள சிறிலங்கா அரசாங்கம், தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்ல, பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் கூறுவது வேடிக்கையாக உள்ளது மட்டுமல்ல கபடத்தனமும் நிறைந்தது. இதேவேளை டி.பி. விஜேதுங்காவும், அவரது அரசாங்கமும் கண்ணை மூடிக் கொள்வதினால் உலகம் இருண்டுவிடாதது போல், சிந்திக்கத் தெரிந்த எவரும் இனப்பிரச்சினை தொடர்பாக டி. பி. யின் நிலையை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

---

ஆண்டு முதல் தமிழக மீனவர் தாக்கப்படும் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக புதுடில்லி கொழும்புக்கு சுட்டிக் காட்டி நட்ட ஈட்டையும் ...ளது இது ஒரு அரசியல் ரீதியான தாககுதல் என நிர்வாகம் தெரிவித்தது.

உருது மொழியிலான இத் தினசரி வெளியாகும் நிறுவனத்தை முற்றுகையிட்ட ... அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடதுசாரி அவாமி தேசியக் கட்சி ஆதரவாளர்களே இத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இக்கட்சி ஆளும் கூட்டு கட்சியின் பிரதான இணைக்கட்சியாக விளங்குகின்றது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்து இக்கட்சியினை வெளியேற்ற பாகிஸ்தான் பிரதமர் பூட்டோவின் கட்சி முயன்று வருகிறது.

... அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே வர்த்தகம் ... கள் பற்றி கண்டறியும் எனத் தெரிவித்தார்.

# இடைத்தேர்தல்கள் மே26-ல் தேர். ஆணையம் அறிவிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டின் சென்னை மைலாப்பூர் மற்றும் பெருந்துறை தொகுதிகள் உட்பட பதின்மூன்று மாநிலங்களைச் சேர்ந்த சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும், ஏழு நாடாளுமன்ற இடங்களுக்குமான இடைத் தேர்தல் எதிர்வரும் மே26ஆம் திகதியன்று நடத்தப்படுமென தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பு ஏப்ரல் 26ஆம்திகதியன்று வெளியிடப்படும் எனவும் மே மாதம் மூன்றாம் திகதிவரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மே 26ஆம் திகதியன்று நடத்தப்படுமெனவும் தேர்தல்கமிஷன் மேலும் கூறியுள்ளது. மைலாப்பூர் மற்றும் பெருந்துறை தொகுதிகளில் வெற்றி பெற்ற அ.இ.அ தி.மு. க உறுப்பினர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து இத் தொகுதிகளில் வெற்றிடம் ஏற்பட்டது தெரிந்ததே,

# உளவாளி கைதினால் சி. ஐ. ஏ. பாதிப்பு

(வாஷிங்டன்)

சி. ஐ. ஏ உளவுப் பிரிவில் மாஸ்கோவின்ஊடுருவல் காரணமாக ரஷ்யாவுக்கு அளிக்கப்படும் உதவியை நிறுத்த அமெரிக்க காங்கிரஸ் முயன்றால் வெள்ளை மாளிகை அதை எதிர்க்கும் என அதிகாரிகள் கூறினர்.

இதேசமயம் உளவு பார்த்தமைககாக கைதான அமெரிக்கரால் அமெரிக்க உளவுத்துறை பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருப்பதாகவும் அமெரிக்காவிற்கு உளவறிந்த 10 ரஷ்ய உளவாளிகளை மாஸ்கோ தூக்கிலிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. கைதானஅமெரிக்கரினால் விளைவிக்கப்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்யும் பொருட்டு சி. ஐ ஏ. தூதுக்கோஷ்டி ஒன்று மாஸ்கோ வரவிருப்பதாக ரஷ்யா தெரிவித்தது.

இதேவேளை மாஸ்கோவுக்கு உளவறிந்ததாக சிரேஷ்ட சி. ஐ ஏ. அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது செனட் அங்கத்தவரிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவிற்கான உதவியை நிறுத்தி வைக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

# ஐ. நா. நிவாரணத்துடன் வாகனங்கள் ஆப்கானுக்கு

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானிற்கு ஐ. நா வின் நிவாரணப் பொருட்களை கொண்டு செல்லும் வாகன அணி பாகிஸ்தானிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொண்ணூறு தொன் எடையுள்ள இவ் உணவுப் பொருட்கள் பட்டினியால வாடும் மக்களுக்கு உதவுவதற்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். ஜலலாபாத் செல்லும் வழியில் இந்த வாகன அணி சண்டையிடும் குழுக்கள் ஒன்றினால் வழி மறிக்கப்பட்ட போதும் தொடர்ந்து செல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் சில வாகன அணிகள் நிவாரணப் பொருட்களுடன் அனுப்பி வைக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

# சர்வதேச மத்தியத்துவம் ஏற்றுக்கொள்ளத் தயார்

### - புத்தலேசி அறிவிப்பு

(ஜோகானஸ்பர்க்)

சில நிபந்தனைகளின் கீழ் சர்வதேச மத்தியத்துவத்தை ஏற்கத் தாம் தயாராக இருப்பதாக தென்னாபிக்காவின் சூலு இன்பாதா கட்சியின் தலைவர் புத்தலேசி கூறியுள்ளார்.

கறுப்பு இனத் தீவிரவாதிகள் மற்றும் வெள்ளை இன பழமைவாதிகளும் எதிர்வரும் தேர்தலில் பங்கு கொள்ள வைக்க ஆபிரிக்க தேசியகாங்கிரஸ் முயற்சி எடுத்து வருவது தெரிந்ததே.

புதிய அரசியலமைப்பை வரைவதில் சர்வதேச மத்தியத்துவத்தின் கீழான பேச்சுக்கள் ஆரம்பமானதும் ஏப்ரல் மாததேர்தலுக்கான பிரசாரத்தில்தமதுகட்சி ஈடுபடும் எனவும் புத்தலேசி செய்தியாளர்களிடம் பேசும்போது மேலும் தெரிவித்தார்.

# விமான விபத்தில் தளபதி பலியானார்

(சியோல்)

தென் கொரியாவின் விமானப் படைத் தளபதி ஷோகுன்ஹை ஹெலிகொப்டர் விபத்து ஒன்றில் பலியானார்

தலைநகர் சியோலுக்குத் தெற்கே மலைக்குன்றின் மீது ஹெலிகொப்டர் மோதியதில் அதில் பயணம் செய்த விமானப் படைத் தளபதியும் அவரது மனைவி உட்பட ஆறுபேர் விபத்தில் இறந்து விட்டதாக ஏஜென்சித் தகவல் தெரிவிக்கின்றன.

# காலை துயிலெழும் போது நிதானமாக எழும்பவும்

### - சீன வைத்தியரின் ஆலோசனை

உறக்கத்திலிருந்து அதிகாலையில் கண்விழித்ததும், உடனடியாகப் பதறி அடித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழும்பும் பழக்கத்தைக் கொண்டவர்கள் மாரடைப்பு நோய் அபாயத்தை கூடுதலான அளவுக்கு கொண்டிருப்பதாக சீன வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் லையோனிங் மருத்துவ கல்லூரியைச் சேர்ந்த ஹுவாங் குவோ ஸியோங் என்ற இந்த வைத்திய நிபுணர் தூக்கத்திலிருந்து கண் விழிக்கும் அந்த முதல் தருணம் மாரடைப்பு ஏற்படும் அபாயத்தையும் திடீர் மரணம் ஏற்படும் அபாயத்தையும் கூடுதலான அளவுக்குக் கொண்டு இருககின்றது. எனவே கண் விழித்ததும் உடனடியாகவே அவசரப்பட்டு படுக்கையை விட்டு எழும்புவதை விடுத்து கொஞ்ச நேரம் படுக்கையிலேயே ஆறுதலாக கிடப்பது உகந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கண் விழிததும் பதறியடித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழும்பினால் இருதயத்துக்கு கூடுதலான பளு ஏற்படும். இவ்வாறு படுக்கையை விட்டெழும் பலருக்கு இருதய நோய் ஏற்படுகின்றது கண் விழித்ததும் படுக்கைகளில் சுமார் 5 அல்லது 10 நிமிடங்கள் படுத்திருக்க வேண்டும். நீண்ட மூச்சுவிட்டு பயிற்சி செய்து கொண்டு எழும்ப வேண்டும்.

எனினும் இந்த ஆலோசனை நடுத்தர வயது ஆட்களுக்கும் வயோதிபர்களுக்கும் தான் கூறுகின்றேன்; சிறுவர்களும், இளைஞர்களும், யுவதிகளும் சோம்பேறிகளாகக் கிடப்பதற்கு இந்த ஆலோசனையை சாட்டாகக் கொள்ளக் கூடாது எனவும் தெரிவித்தார்.

# கிழக்கு ஜெருசலத்தில் அரபாத் தொழுகை நடத்த தடை

(ஜெருசலம்)

கிழக்கு ஜெருசலத்தில் யாசிர் அரபாத் தொழுகை நடத்துவதை தடுக்க தம்மால் இயன்ற அனைத்தையும் செய்யப்போவதாக ஜெருசலத்தின் வலது சாரி இஸ்ரேலிய மேயர் எகுட் ஒல்மேர்ட் கூறியுள்ளார்.

40 ஆண்டுகளாக ஜெருசலத்தில் அரபாத் தொழுகை நடத்தவில்லை. இன்னும் 40 ஆண்டுகளுக்கு அவர் அங்கு தொழுகை நடத்தப்போவதில்லை எனவும் மேயர் சூளுரைத்தார். நான் இருக்கும் வரை அரபாத் ஜெருசலம் வர முடியாது எனவும் அவர் கூறினார்.

1967இல் யுத்தம் மூலம் அரேபியரின் கிழக்கு ஜெருசலத்தை இஸ்ரேல் கைப்பற்றியது. அங்குள்ள அல் அக்ஸா பகுதியை ஆலயக்குன்று என யூதர்கள் அழைக்கின்றனர். யூதமக்களின் புனித ஸ்தலம் என்றும் இங்கு புராதன யூத ஆலயம் இருந்ததாகவும் யூதர்கள் கூறுகின்றனர்.

## பொஸ்னிய போர் நிறுத்தம் முறிவடைந்து விட்டது?

(வாசிங்டன்)

பொஸ்னியாவில் அரசுப் படையினரைநோக்கி சேர்புப் படையினர் நேற்று முன்தினம் துப்பாக்கியால் சுட்ட சம்பவத்தைத்தொடர்ந்து சுமார் மூன்று வாரங்களாக நீடித்த போர்நிறுத்தம்முடிவுக்குவந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து அமைதிப் பணியில் ஈடுபட்டிருக்கும் படையினர் எண்ணிக்கையை 11,000 ஆக உயர்த்த வேண்டுமென ஐ. நா. அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் பெரும் அளவில் அமைதிப் படையினரை அனுப்பிய அமெரிக்கா இவ் வேண்டுகோளை ஏற்க மறுத்துள்ளதுடன், பொஸ்னியா முழுவதிலும் சமாதான ஒப்பந்தத்தை அமுல்படுத்த மட்டுமே படையினரை அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளது.

பொஸ்னியாவிற்கு 6000 படையினரை அனுப்பிய பிரான்சு இனிமேல் அதிக துருப்புக்களை அனுப்பப் போவதில்லை எனக் கூறியுள்ளது.

## விடுமுறைகால சந்தை சனியன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பொது வசதிக் கட்டடத் தொகுதிக்கு பின்புறமாக விடுமுறை காலச் சந்தை ஒன்றை யாழ். மாநகரசபை எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளது.

இவ் விடுமுறை காலச் சந்தை கிழமைகளில் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் இயங்கவுள்ளது.

இங்கு நிரந்தரமான கடைகள் எதுவும் அமைக்க அனுமதி அளிக்கப்படவில்லை அன்றையதினம் விற்பனை செய்துவிட்டு அனைத்துப் பொருள்களும் அப்புறப்படுத்தப்பட்டுவிடும் என தெரியவருகின்றது. (பா), (தி)

## உர வகைகள் சில்லறை விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கமநலசேவை நிலையங்களிலும் உர வகைகள் சில்லறைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையங்களில் போதியளவு உரம் கையிருப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு தேவையான உரம் போதியளவில் கையிருப்பில் இருப்பதாக பதில் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (தி).(பா)

வலி மேற்கு உதைபந்தாட்ட சங்க

## பொதுக் கூட்டம்

27.2.94 இல் நடைபெறவிருந்த வலிகாமம் மேற்கு உதைபந்தாட்ட சங்கத்தின் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு 6.3.94 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளது. வலிமேற்கில் பதிவுசெய்த அனைத்து உதைபந்தாட்ட கழகங்களின் பழைய, புதிய பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்

வலி-மேற்கு உதைபந்தாட்ட சங்கம்.

(சி-8774)

## மெய்வல்லுநர் போட்டி

(வடமராட்சி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி. கல்லூரிகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். (யோ)

ஃ ஃ ஃ

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00 மணியளவில் வித்தியாசாலை அதிபர் திரு. வ. யோகானந்தசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## அதிபர்களுக்கான கூட்டம்

''கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் யா/அத்தியார் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் திங்கள் காலை 9.30 மணிக்கு கூட்டம்

மாநகரசபை ஊழியர்கள்

## முழு அளவில் ஊதியம் பெற முயற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரசபை ஊழியர்களின் சம்பளத்தை முழு அளவில் பெற்றுக்கொள்ள யாழ் மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

யாழ் மாநகரசபை ஊழியர்களுக்கு தற்போது வடகிழக்கு மாகாணசபை சுமார் 60 விகித சம்பளத்தையே வழங்கி வருகின்றது.

மிகுதி சம்பளத்தை யாழ் மாநகரசபை தனது சபை நிதியில் இருந்து ஊழியர்களுக்கு வழங்கிவந்தது ஆனால் தற்கால சூழ் நிலைகளினால் யாழ் மாநகரசபைக்கான வருமானம் முடக்கம் கண்டதைத் தொடர்ந்து யாழ் மாநகரசபை ஆணையாளர் தமது ஊழியர்களின் சம்பளத்தை முழு அளவில் தரும்படி வடகிழக்கு மாகாண சபையைக்கோரி முயற்சி மேற்கொண்டு வந்துள்ளார் என்பது தெரிந்ததே.

எனவே இம் முறையும் கொழும்பு சென்றுள்ள யாழ் மாநகரசபை ஆணையாளர் ஊழியர்களின் சம்பள விபரம் தொடர்பாக திருகோணமலை சென்று கதைப்பார் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா, நி)

## நடமாடும் சேவை

யாழ் மாவட்ட கணித, விஞ்ஞான, மூலவள நிலையத்தின் நடமாடும் சேவை இன்று காலை 8-30 - 4-30 மணிவரை யா/இராமநாதன் கல்லூரியிலும் 14ஆம் திகதி திங்கட்கிழமை யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் நடைபெறும்.

## அரச

ஞம் நாடுகள் தமது உதவிகளை இத்தகைய நிறுவனங்களுக்கே வழங்க முன்வந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் தற்போது இங்கு உண்மையிலேயே இயங்கிவரும் சில உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிப்படையலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## செயலகம்

செய்து தருவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் இன்று வரை இவ் வசதி ஏற்படுத்தப்படவில்லை.

மேலும் பல தடவைகள் குறிப்பிட்ட மண்ணெண்ணையைப்பெற்று விநியோகிக்கும்படி புனர்வாழ்வு பிரிவால் எமக்கு பணிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள அரச அதிபரின் கூற்று முற்றிலும் தவறானதாகும். எமக்கு நேற்றையதினமே மேற்படி தகவல் அனுப்பிவைக்கப்பட்டது. ஆயினும் ஒவ்வொரு சங்கங்களுக்கும் ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் பற்றிய விபரங்கள் எமக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

## துணைவேந்தர் பதவிக்கான வாக்களிப்பில் முறைகேடு

### நிர்வாகத்திற்கு மனு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்திற்கான துணைவேந்தர் பதவிக்கு நியமிப்பதற்கான பெயர்ப்பட்டியலை சிபார்சு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்களிப்பின்போது முறைகேடுகள் நடைபெற்றதாக கூறி ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

கடந்தவாரம் யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவையின் விசேட அமர்வு ஒன்றின் போது இப் பல்கலைக்கழகத்திற்கான அடுத்த துணைவேந்தர் பதவிக்கு நியமிப்பதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிப்பு ஒன்று நடாத்தப்பட்டது.

இந்த வாக்களிப்பின் மூலம் பேராசிரியர் குணரட்ணம், பேராசிரியர் பாலசுப்பிரமணியம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஆகிய மூவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு இவர்கள் தெரிவு செய்யப்பட்ட விடயத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றதாகக்கூறும் மனுப்பத்திரம் ஒன்று இப் பல்கலைக் கழக நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

மேற்படி வாக்களிப்பின் போது நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடு சம்பந்தமான பூரண விபரங்களை நேற்றுமாலைவரை பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும் இம் முறைகேடு சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட மனுப்பத்திரம் தொடர்பாக ஆராய்வதற்காக இப் பல்கலைக்கழகத்தின் பேரவை பெரும்பாலும் இன்று விசேட அமர்வு ஒன்றை நடாத்தும் என்றும் தெரியவருகிறது. (க) (நி)

## பல்கலை.வெட்டுப்புள்ளியில் மாற்றம் எதுவும் இராது

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களின் 92-93ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர்களை அனுமதிக்கும் வெட்டுப்புள்ளித் திட்டத்தில் மாற்றம் செய்யும்படி விடுத்த கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கையை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு நிராகரித்ததைத் தொடர்ந்து வெட்டுப்புள்ளித் திட்டத்தில் மாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது

மேற்படி கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வெட்டுப்புள்ளித் திட்டத்தினால் வடபகுதியைச்சேர்ந்த மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க

## கோமாரி

நின்று மாலை இறக்கிவரும் ஹெந்தல கப்பல் ஞாயிற்றுக்கிழமையும், மண்ணெண்ணெயை இறக்கிவரும் மாகோ கப்பல் திங்கட்கிழமையும் கொழும்புநோக்கிப் புறப்ப

மாநகரசபை, பிரதேச செயலகங்கள்

## வீதிகள் புனரமைப்புக்கு திட்டமிடப்படுகின்றன

யாழ். மாவட்டத்தில் மாநகரசபையின் நிர்வாகத்திற்குட்பட்ட வீதிகளும் பிரதேச செயலகங்களின் நிர்வாகத்திற்குட்பட்ட வீதிகளும் புனரமைப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

யாழ். மாநகர சபையும், பிரதேச செயலகங்களும் தனித்தனியே இந்த வீதி செப்பனிடும் நடவடிக்கையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை பிரதேச செயலகங்களின் இந் நடவடிக்கைக்கு உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை நகர எல்லைக்குட்பட்ட சேதமடைந்த வீதிகளை சீர்செய்வதற்கு 1000 பீப்பா தாரை வடகிழக்கு மாகாணசபையிடம் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

500 பீப்பா தார் முதல் கட்டமாக எடுத்து வரப்பட இருப்பதாகவும் தெரிய வருகிறது.

யாழ் மாவட்டத்தில் பிரதேச செயலகங்களூடாக செப்பனிடப்படும் வீதிகளுக்கான தாரை யாழ். செயலகம் அரசாங்கத்திடம் கேட்டிருப்பதாக தெரிய வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான வீதிகள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளமை தெரிந்ததே. பல வீதிகளில் பிரயாணம் செய்ய முடியாதநிலை தொடர்ந்து நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாரிகால மழை வெள்ளத்தினாலும் சில வீதிகள் அரிக்கப்பட்டு சீரழிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் சீரழிந்துபோயுள்ள பிரதான வீதிகளைக் கூட செப்பனிடுவதற்கு அரசாங்கம் உதவி செய்வதாகத் தெரியவில்லை.

வீதிகளுக்குரிய தார் மற்றும் பொருள்களையும் அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுப்பி வைப்பதற்கு இணங்கியுள்ளதாக கூறப்பட்டது. (தி), (பா)

## உதைபந்தாட்டம்

குருநகர் யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காகப் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று விநாயகர் வி.கவை எதிர்த்து சென்றிஸ் வி. கவும் சென்மேரிஸ் வி. க. வை எதிர்த்து ஸ்கந்தா வி. கவும் விளையாடவுள்ளன இப்போட்டிகள் இன்று பிற்பகல் மூன்றுமணி முதல் பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில்

ளாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளது. வலிமேற்கில் பதிவுசெய்த அனைத்து உதைபந்தாட்ட கழகங்களின் பழைய, புதிய பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்

வலி-மேற்கு உதைபந்தாட்ட சங்கம்.

(கி-8774)

## அதிபர்களுக்கான கூட்டம்

''கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் யா/அத்தியார் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் திங்கள் காலை 9.30 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

05-03-1992இல் கட்டைக்காடு இராணுவ முகாமில் இருந்து கவச வாகனங்கள் சகிதம் வெளியேறிய சிங்களப் படையை துவம்சம் செய்தும், அவர்தம் படைக்கலங்களைத் துகள் செய்தும், கைப்பற்றியும் வீரகாவியம் படைத்து தமிழனின் போர்த்திறன் புகட்டிய வீர வேங்கைகள்- நம் தமிழீழத்தின் மைந்தர்கள்...

| லெப்டினன்ட் | லெப்டினன்ட் | வீரபாண்டியன் |
|---|---|---|
| கலைஞன் | வேந்தன் | (யூலியட்) |
| (நித்தியா) | (வின்சன்) | இம்மானுவேல் தெய்வேந்திரன் |
| சின்னப்பிள்ளை பாஸ்கரன் (இத்தாவில் பளை) | அமிர்தநாதன் அலஸ்ரின் (செம்பியன்பற்று) | (குருநகர் தொடர்மாடி) |
| பிறப்பு; 14 - 09 - 1972 | பிறப்பு; 01 - 05 - 1970 | பிறப்பு: 27 - 11 - 1974 |

காலத்தால் அழியாத வீர வரலாற்றை உருவாக்கி
இன்று எம் தேசத்தின் தெய்வங்களானீர்கள்
உங்கள் கனவு
நனவாகும், மலரும் தேசம் வளமாகும்.

கலைஞன், வேந்தன், வீரபாண்டியன் மாவீரர்களது நினைவாக இயங்கும் படிப்பகம் இம் மாவீரர்களிற்கு தனது இரண்டாவது ஆண்டு நினைவலைகளைச் செலுத்தி, படிப்பகம் தனது மூன்றாவது ஆண்டில் வீறுடன் காலடி எடுத்துவைக்கிறது.

கலைஞன், வேந்தன், வீரபாண்டியன்
படிப்பகம்,
தேவாலய வீதி, தென்மராட்சி, சாவகச்சேரி.

(7664)

ரின் கூற்று முற்றிலும் தவறானதாகும். எமக்கு நேற்றையதினமே மேற்படி தகவல் அனுப்பிவைக்கப்பட்டது. ஆயினும் ஒவ்வொரு சங்கங்களுக்கும் ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் பற்றிய விபரங்கள் எமக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

இப்பிரச்சினைகளுக்கும் மத்தியில் மக்கள் நலனைமுன்னிட்டு நாம் பணத்தைச் செலுத்த முற்பட்ட போதிலும் பணம் வங்கிவரைபு மூலம் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாம்வங்கி வரைவைப் பெற்றுக்கொள்ள வங்கிக்குச் சென்றபோது பணத்தை ஏற்க வங்கி மறுத்துவிட்டது. போதிய பாதுகாப்பு இன்மையால் மேலதிகமாக பணத்தை பெற்றுக் கொள்ளமுடியாது என வங்கி தெரிவித்துள்ளது.

இத்தகைய நடைமுறைச் சிக்கல்களாலேயே சங்கங்கள் இதுவரை மண்ணெண்ணையைப்பெற்றுக்கொள்வில்லை. ஆயினும் இன்றையதினம் அதனைப்பெற்று ஒவ்வொரு குடும்பங்களுக்கும் நான்கு லீற்றர் வீதம் இன்று விநியோகிக்க தாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச) (பா)

லைக் கழக மானியங்கள் ஆணைக்குழு நிராகரித்ததைத் தொடர்ந்து வெட்டுப்புள்ளித் திட்டத்தில் மாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது.

மேற்படி கல்வியாண்டுக்

### பல்கலைக்கழக

படுத்துவது என்பது குறித்து இக்குழு தற்போது ஆராய்ந்து வருகின்றது. இதற்காக பல்வேறு மட்டங்களில் கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் கலந்தாலோசனைகளை இக்குழு மேற்கொண்டு வருகின்றது.

இக்குழு தனது ஆராய்வின் இறுதியில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான புதிய திட்டத்தை அல்லது திருத்தத்தை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று கொழும்பில் இருந்து எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க).(நி)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சரவணபவன் யோகாம்பிகை

யா/மண்டைதீவு மகாவித்தியாலய மாணவர்களான

ச. மோகனபவன்
ச. விஜிதா
ச. தேவமாலினி

ஆகியோரின் அன்புத் தாயாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு யாழ்/மண்டைதீவு மகா வித்தியாலயம் தனது ஆழ்ந்த துன்பம் நிறைந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றது.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சபை.

இல. 95, யா/மண்டைதீவு ம. வி.
புதிய உயர்கல்லூரி (7665)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்தில் உள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### கோமாரி

நின்று மாலை இறக்கிவரும் ஹெந்தல கப்பல் ஞாயிற்றுக்கிழமையும், மண்ணெண்ணெயை இறக்கிவரும் மாகோ கப்பல் திங்கட்கிழமையும் கொழும்புநோக்கிப் புறப்படும் (யோ)

டித் தொடரில் இன்று விநாயகர் வி.கவை எதிர்த்து கென்றிஸ் வி.கவும் சென்மேரிஸ் வி.க.வை எதிர்த்து ஸ்கந்தா வி.கவும் விளையாடவுள்ளன இப்போட்டிகள் இன்று பிற்பகல் மூன்றுமணி முதல் பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 4-3-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1085

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

43-3854, 26-6361, 28-8589, 27-8515, 26-1498, 42-6452, 26-0525, 26-4139, 26,3638, 26-5760, 27-9492, 24-0415, 24-4664, 24-917, 42-0999, 26-3962, 24-9830, 42-9325, 26-5814, 28-1928, 42-3615, 24-5886

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

28-2385, 26-8378, 27-4070, 27-5217, 24-3894, 24-3897, 41-8061, 24-3297, 41-9907, 26-4058, 42-3514, 26-9992, 41-9995, 42-1172, 27-0922.

## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு நடராசா

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த வெற்றிவேலு நடராசா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வெற்றிவேலு, தங்கப்பிள்ளையின் மகனும், செல்வநாயகி அம்மாவின் அன்புக்கணவரும், சிவகாமிப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம், இரத்தினசிங்கம் (இளைப்பாறிய சிறைச்சாலை மேற்பார்வையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசநாயகி (பிரதேச செயலகம் உடுவில்), இராசசெல்வி, இராசசௌந்தரி (ஆசிரியை மன்னம்பிட்டி தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசம் மிக்க தகப்பனாரும் சிதம்பர திருச்செந்திநாதன் (பிரதேச செயலகம் உடுவில்) தவராசா (உரிமையாளர் ஜனனி அரிசி ஆலை உடுவில்) ஆகியோரின் மாமனாரும் சிதம்பர சுப்ரமணியன், சிதம்பரவாணதி, துவாரகன், ஹரப்பிரியன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05-03-94) சனிக்கிழமை பிபகல் 2-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்
சிதம்பர திருச்செந்திநாதன்

வதிதனை
அம்பலவாணர் வீதி,
உடுவில்கிழக்கு,
சுன்னாகம்.

(7666)